www.tamilarangam.net

# தூண்டில்




Tamilische Zeitschrift des Südasienbüros 45

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாறுடநகர்வு

குடமுருட்டியாறும்,
குஞ்சுப் பரந்தன் வெளியும்
மணலையும்,
வெறுமையையும் சுமந்தன...

மூசி வீசுகிற சோளகத்தை எதிர்த்து
மூக்கி முட்டை சுமந்தனர்
மனிதர்.

ஆற்றாமையை வெல்ல
ஆறெனப் பெருகும் வியர்வையில்
குளித்தனர் மனிதர்.

ஒரு குழியில் சரிந்து
தசை நாரை முறுக்கி
முட்டை நிமிர்த்தி
மறுகுழியில் சரிய
உதவிக்கும் ஆளில்லாத
நள்ளிரவுகளில்
வானத்து நட்சத்திரங்கள்
வந்து சுமை தாங்கும்.

நீள் தொலைவில்
மனக் கண்ணில்
தெரிகிற சிறு குடில்,
எரியப்போகும் அடுப்பு,
மழலைகளைக் கையணைத்து
காத்திருக்கும் கண்மணியாள்...

கால் எலும்புகள் மொறுமொறுக்க
தள்ளாத சுமையுடன்
நகர்வர் மனிதர்
நம்பிக்கை ஒன்றே குறியாக.

**

பாவலன் (ஈழம்)

www.tamilarangam.net

# வாசகர் கடிதங்கள்

கலம் 44இல் கடலோடிகளின் தலையங்கத்தைக் காணவில்லை. மற்றும் அட்டைப்படத்திற்கான விள க்கமும் இல்லை. அட்டைப்படம் என க்கு இரண்டு அர்த்தத்தைத் தருகி றது.

1. கடலோடிகள் மேல் தூக்குக்கயிறு ஊசலாடுகிறது.

2. தூண்டிலை எவராவது மிதித் தால் அவர்களுக்கு மேல் தூக் குக் கயிறு தொங்கும்.

அர்த்தம் 1இற்கும், தலையங்கம் இல்லாமைக்கும் ஏதாவது சம்பந் தம்...?!

பத்திரிகை என்ன கருத்தைக் கூறினாலும் சலிப்படைய வைக்கும் வசனங்களைத் தவிர்த்து வாசக ரின் வாசிப்பைத் தூண்டும் விதத் தில் சுவையாக எழுதப்படவேண் டும். அந்த வகையில் கலம் 44 சிற ப்பானது.

"களவை மிதித்தவன்" நன்றாக உள்ளது. ஆரம்பத்திலிருந்து படிக் காத குறையைத் தவிர. இதுவரை வந்தவற்றைப் புத்தகமாக்கினால் என் போன்ற இடையிலிருந்து வாசி ப்பவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும்.

- இராஜன் முருகவேல்

*

*

*நீங்கள் மிகவும் கற்பனைவ ளம் நிரம்பியவராயிருக்கிறீர்கள்!. தமிழரின் போராட்டத்தில் நிர்ப்பந் தமாய் பிணைக்கப்பட்டுள்ள தற்கொ லைச் சமூகத்தை குறிப்பதாகவே அவ் அட்டைப்படம் எமக்கு அர்த் தம் தருகிறது.*

*தலையங்கம் பற்றி முன்பும் குறிப்பிட்டிருக்கிறோம். சென்ற கல த்தில் நாங்கள் எழுத இருந்த கரு த்தை ஏனைய ஆக்கங்கள் கொண்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டிருந்தன.

*

*

சென்ற கலத்தில் வெளியான அனிச்சா எழுதிய "இங்கே கன்னி கழிக்கப்படும்"என்ற கவிதைமூலம் எமது சமூகத்தில் குறிப்பாக யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களின் வாழ்க்கையின் மையமாக திருமணம் அமைவதும் அதற்காக முன்பின் அறிமுகமில்லாத ஒருவருக்கு பெருமளவில் சீதனம் கொடுத்து வெளிநாடுகளுக்கு பெண்களை அனுப்புவதும் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. "இதற்கப்பால் என்ன?ஒரு...தாலி, நகை,கூறையுடன் ஒரு"எனும் வரிகள் இதை மேன்மேலும் தெளிவாக்குகின்றன."இங்கே கன்னி கழிக்கப்படும்"எனத் தலையங்கம் இட்டதன் மூலம் எமது சமூகத்தில் நடைபெறும் அதிகமான திருமணங்கள் மன ஒற்றுமையை முதன்மைப்படுத்தாது ஆண்களுக்குச் சாதகமான முறையில் பாலியற் தேவைகளுக்காகவே நடைபெறுகின்றன என்பதையும் இக் கவிதை அழகாகச் சித்தரிக்கிறது.

– உமா

*

*

சுமக்க முடியாத கல்லைத் தூக்கிறவன் ஈற்றில் தனது காலில் போட்டுக்கொள்கிறான்.

ராஜீவ்காந்தி கொலையில் தூண்டிலுக்கும் சம்பந்தம் இருக்க வாய்ப்புண்டு என்ற சந்தேகக் கண்ணோட்டம் இக் கடிதத்தில் சிறிதளவும் விழுந்துவிடக்கூடாது என்ற ஜாக்கிரதை உணர்விற்கு மிகவும் மிகவும் முக்கியத்துவமளித்து பிள்ளையார் சுழி போட (16.06.91 வீரகேசரி வாரமலரில் மலரன்பன் எழுதிய பிள்ளையார் சுழி என்ற தரமான சிறுகதையைப் படிக்கும் வாய்ப்பு இங்கு எத்தனை வாசகர்களுக்குக் கிடைக்கப் போகிறது) பேனையை வில்லங்கப்படுத்துகிறேன்.

போராட்டமென்பது கொல்லுதலும்,அம் மகிழ்ச்சிப் பெருக்கில் கோழி,கோகோ கோலா அடிப்பதும் (கரிகாலன் கோகோ கோலா சின்னமணிந்த சீருடை போடுவது தெரிந்ததுதானே.) பிறவிப்பெரும் பயனாய் கருதும் கொடூர உளவியல் விகாரம் அதிகாரம் செலுத்தும்வரை மனிதநேசம், மனிதப் பண்பாடு செப்புக்காசு மட்டுமல்ல. அதற்கெதிராகக் குரல் கொடுத்தால் அது அம் மனிதர்களின் மரித்தோர் திருநாளுமாகும்.

தம்பியோ அல்லது பெரியய்யாவோ அல்லது டக்ளலோ அல்லது எந்த இராணுவமாயிருந்தாலென்ன மனிதர்களின் மரணம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றித்து நாம் சந்தோசப்படமுடி ாது.சந்தோசப் பித்தேறிச் சாவ ற்கு நமக்கென்ன இந்திரர்கள் ந்தா ரந் தந்து போனார்கள் ன்று ஒரு ஈழத்துக் கவிஞன் பாடு போது அக் கவிஞன் வாழ்வின் தான நேசம் அனைத்து மரணங் ளுக்குமான எதிர் விமர்சனத்தை ன்வைக்கிறது.80களிற்கு முன்னர் ிரேத ஊர்வலம் தெருவில் பாயின் நாம் ஒதுங்கி நின்று ணக்கம் செலுத்துதல் (கண்டிப் ாக வீரவணக்கம் அல்ல) எமது யர் பண்பாடு.

ஆனால் தனிநபர் பயங்கர ாதத்தின் விபரீத விளைவுகளைப் ற்றி கிஞ்சித்தும் அவதானமும், ருவருப்பும் இன்றி புதிய ஜனனா கம் ரஞ்சன் விஜேரத்ன கொலை கு புரட்சிகரப் பயங்கரவாதம், பால் சரியான தண்டனை எனக் கைதட்டி விசிலடித்து தன்-நிலை-விளக்கம் அளித்ததும்,இப் போது ராஜீவ்காந்தி கொலைக்கு "இவர்கள் கவலைப்படப் போவதி ல்லை"என்றும்,ராஜீவின் கொலை யில் நன்மையுண்டு என்றும் எழு தப்போக,ஐரோப்பிய நாடுகள் எங் கும் புலிகள் இதைப் போட்டோக் கொப்பி எடுத்து வீடுவீடாக விநி யோகித்ததுமான தாற்பரியப் பின் னணிகள் குறித்து நாம் நன்றாக அறிவோம்.

கொலையைத் தவிர வேறு எதிலும் விருப்பமில்லாத பயங்கர வாதக் குழுக்கள்,கொள்ளைக் கோஷ்டிகள்,கூலிக் கொலைஞர்கள் வளர்த்துவிடப்படும் எமது சூழலில் -மூன்றாம் உலகநாடுகளில்-மனித இருத்தலுக்கான சாத்தியம் இன் னும் எவ்வளவுகாலம் நம்பிக்கைய ளிக்கக் கூடியது?

## நகைச்சுவை!

*இந்தியாவுடன் தேவையில்லாமல் பகைத் துக்கொள்வதால் இலங்கைக்கு எதுவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை.இந் தியாவுடன் ஒத்துழைப்பதன் மூலம் எம க்கு இன்னும் பல நன்மைகள் கிட்டும் என்பதை மனதில் கொள்ளவேண்டும். (பாராளுமன்றத்தில் EPRLF எம்.பி. பிறேமச்சந்திரன்)*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிய ஜனனாயகத்தின் போட் டோக்கொப்பி பாணி அரசியல் இலங்கையின் சமூகப் பொருளா தார மாற்றத்திற்கு உதவப்போவதி ல்லை.அல்லது எம் தற்காலத்து அறிவிற்கு எட்டியவரை பஞ்சாப் மக்களும்,அஸாம் மக்களும்,போபா ல் மக்களும்,ஈழ மக்களும் ராஜீவ் கொலைக்கு அழுமாட்டார்கள் என் பதை மாற்றிக் கவலைப்படப் போ வதில்லை என்று சிறு திருத்தம் செய்வதால் அதன் சாராம்சம் மாறப் போவதில்லை.

தூண்டில் தனது சுய தேடலை முடித்துக்கொண்டு தன்னை 50/60 சொற்களுக்குள் கண்டிப்பாக மேற் படாத சித்தாந்த யொக்கிற்குள்ளோ அல்லது கோஷ்டி வாதத்திற்கு ள்ளோ திணித்துக்கொண்டுள்ளதா என்று ஐயப்படாமல் இருக்க முடிய வில்லை.

இலங்கை அரசியலில் இருந்து மட்டுமல்ல,இந்திய அரசியலில் இருந்து மட்டுமல்ல,மூன்றாம் உலக நாடு களின் அனைத்துப் பரப்புகளிலிருந்தும் துப்பாக்கிக் கலாச்சாரம் களையப்படவேண்டி யது இன்று உடனடியானதும் அவ சரமானதுமான பணியாக உள்ளது. எமது அடுத்த தலைமுறைக்காவது உயர்ந்த பண்பாட்டைக் கொடுக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் தான் நாம் வாழ்ந்துகொண்டிருக் கிறோம்.

கொலைகள் குறித்து சந்தோச ப்படும் முதல் மனிதர்களின் பிடியி லிருந்து நாம் வெகுதூரம் வந்து விட்டோம்.கொன்று குதறுவதை மட்டுமே நமது தலைமுறைச் சிந் தனையின் அதி உயர்வீச்சாகக் கரு தப்படுவதற்கு மாறாக வெகுசன இயக்கத்தின் நவீன காலச் சிந் தனை எப்படி இருக்கின்றது என்ப தைப் பாருங்கள்.

கொலை செய்யப்படாத<br>
ஒருவெளியை நோக்கி<br>
நடப்பதற்கு அஞ்சும்<br>
மனிதப் பாதங்கள்<br>
........................<br>
........................<br>
துப்பாக்கிகளைத் தூக்கி எறிந்த<br>
ஒரு யுகத்திடம்<br>
விசாரணை நடத்தும்<br>
மனித உரிமைகள் பற்றி<br>
நான் இன்னும் எழுதவில்லை.

– "விசாரிக்கப்படாத வாக்குமூலம்"

முகமட் நகீபு(தினகரன் வாரமலர்)

– சுகன்

*

*

*இவ் வாசகர் கடிதத்தில் உள்ள இரண்டு முக்கிய அம்சங்க ளில் ஒன்று ராஜீவின் கொலைக்கு தூண்டில் உரிய மரியாதை செலுத் தவில்லை என்பது.(இக் கருத்தை வேறு சில வாசகர்களும் நேரி லும்,தொலைபேசி மூலமும் தெரி வித்திருந்தனர்.ராஜீவ் கொலையை*

www.tamilarangam.net

அடுத்த புத்தகத்தில் கண்டித்து எழுதாவிட்டால் தான் தூண்டில் எடுப்பதைப் பற்றி யோசிக்கவேண்டும் என்று ஒருவர் சொன்னார்.) இரண்டாவது, புதிய ஜனநாயகத்தை போட்டோக்கொப்பி பண்ணி தூண்டில் எழுதியுள்ளது என்பது.

இன்றைய உலகில் நிலவும் முரண்பாடுகளில் ஒன்றைப் பற்றி இக் கடிதத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. கொலைகாரர்கள், கொல்லப்படுபவர்கள் என்ற இந்த முரண்பாட்டில் கொலைகாரர்கள் அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்களாக அரசுகளாகப் பலமாகவும், ஸ்தாபனப்பட்டும், கொல்லப்படுபவர்கள் பிரதானமாய் மக்கள், போராளி-களாக ஆயுதரீதியில் பலவீனமாகவும் உள்ள நிலையில் இந்த இரண்டு பக்கத்தையும் சாராமல் மனிதாபிமானத்தை "நடுவிலே"நின்று நிறுத்துப் பார்ப்பதாக நினைத்துக் கொண்டிருப்பது எந்த மாற்றத்தையும் கொண்டுவரப்போவதில்லை. மாறாக இந்தப் பக்கச் சார்பற்ற "மனிதாபிமானம்" கொலைகாரர்களை எந்த விதத்திலும் பாதிக்காததால் அவர்களால் கொல்லப்படுபவர்களின் எண்ணிக்கையை கணக்குப் போட்டுக்கொண்டிருக்கத்தான் உதவும்.

இதுதான் இன்றை உலகம். ஆதாரத்திற்கு 58 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கையைப் பார்க்கவும். மனித நேசமுள்ளவர்களாக வாழ்வதே எமது விருப்பமும் அனைத்து மக்களின் விருப்பமும். அதற்காக கண்ணை மூடித் திண்ணையில் சாய்ந்துகொண்டு கனவு காண முடியாது. இத்தகைய கனவுகளுக்கும் அதிகாரத்திலுள்ளவர்களால் இன்று மரணதண்டனைதான்.

துப்பாக்கிக் கலாச்சாரம், கொலை அரசியல், வன்முறை, பயங்கரவாதம் என்ற சொற்களெல்லாம் அரசுகளுக்கெதிரான குழுக்கள் ஆயுதம் தூக்கும்போதுதான் முக்கியத்துவம் பெறுகின்றன. இதற்கு முன்பிருந்தே ஆரம்பித்துவிட்ட அரச பயங்கரவாதம் இதன் மூலம் அங்கீகாரம் பெற்றுவிடுகிறது. அரசானது தனது ஒடுக்குமுறையை "எல்லா" விதத்திலும் ஸ்தாபனரீதி யாக நடாத்திவரும் போது அதை அதேவழியில் முறியடிப்பது தவிர்க்க முடியாமற்போகையில் அல்லது தற்பாதுகாப்புக்கான நடவடிக்கைகளில் ஈடுபடுகையில் மறு கன்னத்தையும் காட்டு, கண்ணை மூடித் தியானம் செய் அப்போது தான் உயர்ந்த பண்பாட்டைக் கட்டிக்காக்கலாம் என்று கூறுவது நிச்சயம் மனிதாபிமானமல்ல. கொலைகாரர்களிடம் பலிக்கடாக்களை ஒப்படைப்பது எப்படி மனிதாபிமானம் ஆகமுடியும். பயங்கரவாதத்தின் ஊற்றுமூலமான ஒடுக்குமுறை அரசைத் தகர்த்தபின்தான் மனிதாபிமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணத்தைத் தேடமுடியும்.

மக்கள் மீது புலிகளின் அடக்கு முறை இருந்தாலும்,புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவதை அங்குள்ள பெரும்பாலான மக்கள் விரும்ப மாட்டார்கள்.காரணம் இலங்கை அரசின் கொலைப்படைகளை புலிகளின் ஆயுதங்கள் தடுத்துக்கொண்டிருக்கிறது என்ற அவர்கள் அபிப்பிராயமே.இதற்காக அம் மக்கள் யாவரும் மனித நேசமற்றவர்களாகி விடமாட்டார்கள்.இங்கே உயிரை யாரிடமிருந்து பாதுகாத்துக்கொள்வது என்பதில் அரசே முதன்மையான எதிரியாக இருப்பது தெரிகிறது.அடுத்த தலைமுறையாவது மனிதநேயம் நிரம்பிய சூழலில் வாழ வேண்டும் என்ற நம்பிக்கைதான் இன்று வாழ்க்கையுடன் போராட வைக்கிறது .இந்த நிலைமையில் சமரசம் தேடுவதுதான் இரத்தம் பாய்வதை நிரந்தரமாக்கும் மனித நேயமற்ற செயலாகும்.

2 வருடத்திற்குள் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தனது இன மக்களையே தெருவில் போட்டு உயிரோடு எரித்தவன்,குழந்தைகளின் கண் முன்னால் அவர்களின் தாய்மார்களின் தலைகளை வெட்டி அதே குடிசைகளில் அத் தலைகளைத் தொங்கவிட்டவன்,பெற்றோர்களின் கண் முன்னாலேயே பிள்ளைகளை உயிருடன் ரயர் போட்டுக் கொளுத்தியவன் (அன்னையர் முன்னணியிடம் ஆதாரங்கள் பெற்றுக்கொள்ளலாம்)தான் ரஞ்சன் விஜேரத்ன.இவனால் தங்கள் வாழ்வை இழந்தவர்கள் இவன் கொல்லப்பட்டதினால் ஏனையவர்களாவது காப்பாற்றப்பட்டார்களே என்று சந்தோசமடைவதிலும் மனிதநேயம் இருக்கிறது.

ஈழமக்கள் பால் தமக்கு அக்கறையிருப்பதாக வீர முழக்கங்கள் செய்தவர்களும்,ஈழப் பிரச்சினையைப் பயன்படுத்தி தங்களின் சஞ்சிகை,பத்திரிகை வியாபாரங்களைப் பெருக்கி காசு சம்பாதித்தவர்களும் ராஜீவ் கொலையின் பின் சோலி வேண்டாம் என ஒளித்துக் கொள்கையில் ,ராஜீவ் கொலையின் மர்மத்தை துப்புத் துலக்கிக்கொண்டிருக்கையில், தாம் கைது செய்யப்படுவோம்,தாக்கப்படுவோம் என்ற அச்சுறுத்தல்களையும் மீறி ஈழ அகதிகளைப் பலாத்காரமாக இலங்கைக்குத் திருப்பியனுப்பும் நடவடிக்கையை எதிர்த்து தெருத் தெருவாகப் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கிறார்கள் புதிய ஜனநாயகம் அமைப்பினர். இன்றும் ஈழப் போராட்டத்தின் மீதும்,ஈழ அகதிகள் மீதும் உண்மையான அக்கறை செலுத்திவரும் புதிய ஜனநாயகம் அமைப்பினருக்கு மக்கள் விரோதி ரஞ்சன் கொல்லப்பட்டது சரியானதேயெனச் சொல்லும் தார்மீக பலம் உள்ளது. இவர்களின் உழைப்பைக் கிஞ்சித்

(தொடர்ச்சி 44 ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உலகத்தமிழர் 1—11—1990



டென்மார்க்கில் Politiken பத்திரிகையில் 11—10—1990இல் வெளியான செய்தியின் மொழிபெயர்ப்பு

**உலகத் தமிழர் இயக்கம்**

சமீப காலமாக ஜேர்மனியில் 'உலகத் தமிழர் இயக்கம்' என்ற இயக்கம் பரவலான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இவ்வியக்கம் தன்னை "இயக்கச் சார்பற்றது" என அறிமுகப்படுத்திக்கொள்கிறது. இலங்கையில் நடக்கும் இனப்படுகொலைகளை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தவும், 1988ஆம் ஆண்டுக்குப் பின்னர் இங்கு வந்த அகதிகளை நாடு கடத்த இருக்கும் திட்டத்தை எதிர்த்தும் என்ற அறிவித்தல்களுடன் பல நகரங்களில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் இவ்வியக்கத்தால் நடாத்தப்பட்டு வருகின்றன. இவ்வியக்கத்தின் 'கல்விச் சேவை' என்ற பிரிவின் கீழ் சில நகரங்களில் 'தமிழாலயம்' என்ற பெயரில் தமிழ்ப் பாடசாலைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே சில இடங்களில் அங்கு வதியும் தமிழர்களின் சுய முயற்சியினால் உருவாக்கப்பட்ட தமிழ்ப் பாடசாலைகளும் உலகத் தமிழர் இயக்கத்தின் "முயற்சியினால்" தமிழாலயமாக மாற்றப்பட்டு வருகின்றனவாம்!!.

இதுகாலவரை ஈழத்திலியங்கும் ஆயுதமேந்திய இயக்கங்களினாலேயே பெரும்பாலும் வெளிநாடுகளிலும் ஊர்வலம் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவைகளுக்கே இதைச் சுலபமாகச் செய்துமுடிப்பதற்கான நிதி, ஆள், தகவல் வசதிகளும் இருந்தன. இப்படியிருக்கையில் "இயக்கச் சார்பற்ற" இயக்கமொன்று குறுகிய காலத்திலேயே பரந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவது பலருக்கு ஆச்சரியமாயிருக்கலாம். இந்த இயக்கம் இப்படி இயங்க புலிகளின் மேற்கு ஜேர்மனிக் கிளையினர் எப்படி அனுமதித்தார்கள் என்றும் ஆச்சரியமாயிருக்கலாம். ஏனெனில்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'தமிழீழத்தில்' மட்டுமல்ல ,வெளி நாடுகளிலுள்ள தமிழர்களையும் தங் கள் "கட்டுப்பாட்டுக்குள்" வைத்திரு ப்பதே புலிகளின் விருப்பம் என்ப தைவிட அவர்களின் கொள்கை என்பதே கூடப் பொருந்தும்.

யூலை மாதம்வரை எங் களுக் கும் இது ஆச்சரியமான விடயமா கவே இருந்தது.எனினும் ஒரு சந் தேகம் வந்து புலிக்குக் காசு சேர் க்கும் சிலரை விசாரித்துப் பார்த் தோம்."உலகத் தமிழர் இயக்கத்தி ற்கும் எங்களுக்கும் எந்த சம்பந்த முமில்லை.அது பொதுவான ஒரு அமைப்பு" என்று அடித்துச் சொல் லிவிட்டார்கள்.( அடித்து என்பது இங்கு தாக்கி என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படவில்லை!)." அப்படி யென்றால் நீங்கள் ஏன் அந்த இய க்கத்தைத் தடை செய்யவில்லை? இனத் துரோகிகள் என்று சொல்ல வில்லை?"என அவர்களிடம் கேட்க முடியுமா? என்றாலும் எமக்கு சந் தேகம் தீரவில்லை."வாயை மூடிக் கொண்டிருங்கள்" என்று யாழ்ப்பா ணத்தில் மக்களுக்கு உத்தரவிடுபவ ர்கள் வெளிநாட்டில் இப்படி ஒரு "பொதுவான" இயக்கத்தைப் பார் த்து தாங்கள் வாயை மூடி வைத்தி ருப்பார்களா?கனடாவில்,நோர்வே யில்,ஹொலண்டில்,பிரான்ஸில்...எல் லாம் தம்மைச் சாராதவர்கள் மேல் இவர்கள் தாக்குதல்கள் மேற்கொ ண்டார்கள் என்று சில சஞ்சிகைக ளில் வாசித்திருந்தோம்.

எங்கள் சந்தேகத்தை இன்னும் அதிகரிக்கும் வகையில் புலிகளின் வலுவான ஆதரவாளர்களே உலகத் தமிழர் இயக்கத்திலும் இடம் பெற் றிருந்தார்கள்.இதைவிட "படித்தவ ர்கள்" சிலரும் இந்த இயக்கத்தின் பின்னணி எது என்று ஆராய்வது தேவையற்றதென்ற கருத்துடனும், இது பற்றித் தெரியாமலும் இடம் பெற்றிருந்தார்கள்.

நாங்கள் நீண்டகாலம் மண் டையை உடைக்கத் தேவையில்லா தபடி பொன் நகரில் உலகத்தமிழர் இயக்கத்தால் நடாத்தப்பட்ட ஊர்வ லம் எல்லாவற்றையும் போட்டுடை த்துவிட்டது.

அகதிகளை நாடுகடத்த வேண் டாம் எனக் கோரி ஆங்காங்கு பல எதிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுக்கொண்டிருந்த நேரம் அது. ஊர்வலம் ஒன்று நடாத்த இருப்ப தாகவும்,எல்லாத் தமிழர்களையும் ஒத்துழைக்கும்படியும் கோரி மூல் ஹைம் வாழ் தமிழர்களினால் வெளியிடப்பட்ட பிரசுரமே முதலா வதாக எங்கள் கையில் கிடைத் தது.இந்த ஊர்வலம் நடக்க இரு ந்த திகதிக்கு அண்மையாக புலிகள் "கண் விழித்து",உலகத் தமிழர் இயக்கம் ஆர்பாட்ட ஊர்வலம் நடாத்த இருப்பதாக தங்கள் தொலைபேசிச் செய்திகள் மூலம் அறிவிக்கத் தொடங்கிவிட்டார்கள். (கவனிக்க: தங்களைத் தவிர

www.tamilarangam.net

வேறு யார் ஊர்வலம் வைத்தாலும், கூட்டங்கள் வைத்தாலும் இதுவரையில் அறிவிக்காத புலிகளின் உத்தியோகபூர்வ செய்தி நிலையம் 'உலகத் தமிழர் இயக்கத்தின்' ஊர்வலம் பற்றி நாள்தோறும் அறிவிக்கிறதென்றால் – தமிழீழ மக்களை கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கின்றதென்றால் – உலகத் தமிழர் இயக்கத்திற்கும் புலிகளுக்கும் "எந்த சம்பந்தமும்" இல்லையென்பது காதில் பூ வைப்பதன்றி வேறென்ன?!).

முல்லைஹம் வாழ் தமிழர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலத்திற்கு 10 நாட்களுக்கு முன் உலகத் தமிழர் இயக்க ஊர்வலம் நடந்தது. எங்கள் நகரப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர்களே ஊர்வலத்திற்கு ஆட்களைத் திரட்டியதுடன், பல்லையும் ஒழுங்கு செய்ததிலிருந்தே "புலிகள்தான் ஊர்வலம் வைக்கிறார்கள் போலிருக்கிறது" என்று எல்லோரும் தங்களுக்குள் கதைத்துக் கொண்டார்கள். இந்தக் கதை அடிமட்டதிலிருந்து ஊர்வலத்திற்கு வர சிலர் மறுத்துவிட்டனர். ஒரு சிலர் புலிகளின் அராஜகங்களுக்கெதிரான உணர்வுகளைக் கொண்டிருந்தாலும், அகதிகளின் இக்கட்டான நிலைமைகளை வெளிக்கொணரும் ஒரு சந்தர்ப்பமாக இவ்வூர்வலத்தைக் கருதி தமது வெறுப்பையும் வெளிக்காட்டாது ஊர்வலத்தில் கலந்துகொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. உலகத் தமிழர் இயக்கத்தின் பின் யார் மறைந்திருக்கிறார்கள் என்பதை ஊர்ஜிதம் செய்ய நாங்களும் கலந்துகொண்டோம்!

06.07.1991இல் இவ் வூர்வலம் நடைபெற்றது. பங்குபற்றியவர்களின் தொகை மூவாயிரத்திற்குள்ளிருக்கும். ஆனால் பின்னர் புலிகளின் தொலைபேசிச் செய்தியில் ஆறாயிரத்திற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டதாக கூறப்பட்டது!.(கவனிக்க: உலகத் தமிழர் இயக்கத்தின் ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை பற்றிய புலிகளின் அக்கறை!).

ஊர்வலத்தில் தூக்கப்பட்ட சுலோக அட்டைகளும், முன் வைக்கப்பட்ட கோஷங்களும் புலிகள்தான் உலகத் தமிழர் இயக்கம் என்று தெரிந்தவர்களுக்கு எதிர்பார்த்தனவாயும், இது "பொதுவான" அமைப்பின் "பொதுவான" ஊர்வலம் என்று நம்பி வந்தவர்களுக்கு அதிர்ச்சி தருவனவாயும் இருந்தன. அவையாவன:

1. எமது தலைவர் – பிரபாகரன்

2. எமக்கு வேண்டும் – தமிழீழம்

3. அனுப்ப வேண்டாம் – இலங்கைக்கு.

www.tamilarangam.net

ஈழத்தில்....

கனடாவில்....

ஜேர்மனியில்....

"கோப்பி"

எமது தலைவர் பிரபாகரன் என்று கத்தச் சொன்னவுடன் ஊர்வலத்தில் கலந்துகொண்ட சிலர் திரும்பிப் போகத் தலைப்பட்டனர். ஏனெனில் புலிகளுக்கும், உலகத் தமிழர் இயக்கத்திற்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்று கூறியே இவர்கள் ஊர்வலத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தனர். எனினும் ஊர்வலத்தை நிர்வாகம் செய்த புலி உறுப்பினர்களால் சமாதானப்படுத்தப்பட்டு - சமாளிக்கப்பட்டு - முணுமுணுப்புகளுடன் தொடர்ந்து பங்குபற்றினர். தொடர்ந்து பங்குபற்றாமலும் சிலர் போனார்களா என்பதை எம்மால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

இதைவிட, 'அனுப்ப வேண்டாம் - இலங்கைக்கு' என்பதையே அநேகமானோர் கோஷமிட்டனரே தவிர 'எமது தலைவர் - பிரபாகரன்' என்று இறுதிவரையும் கத்தவேயில்லை. இந்த உறுதி மக்கள் மீது எப்போதும், எல்லாவற்றையும் வலுக்கட்டாயமாகத் திணித்துவிட முடியாது என்பதைக் காட்டியது. எங்களுக்குத் தெரிந்த புலி உறுப்பினர்களில் சிலர் கூட வெட்கப்பட்டு இப்படிக் கோஷமெழுப்பாமலிருந்ததையும் காணக்கூடியதாயிருந்தது!. தோழமையாக மதிக்கப்படவேண்டிய தலைமைத்துவம் புலி இயக்கத்தைப் பொறுத்தவரையில் தலைமை விசுவாசமாகி கற்பூரம் கொளுத்திக் கும்பிடும் பக்தியாகவே போய்க் கொண்டிருக்கிறது.

(கவனிக்க: உலகத் தமிழர் இயக்கத்தின் தலைவரும் பிரபாகரன்!)

www.tamilarangam.net

எமக்கு வேண்டும் - Aufenthaltsbefugnis (நிரந்தர வதிவிட அனுமதி) என்ற குரல்களும் காதில் விழுந்தன.இவை விஷமத்தனமாக ஒலித்தனவா அல்லது தமிழீழம் வேண்டும் என்று கத்தியவர்களில் சிலரின் உண்மை விருப்பத்தைப் பிரதிபலித்தனவா என்று சொல்லமுடியவில்லை.இதே நேரம் அகதிகளைத் திருப்பியனுப்பும் மனிதாபிமானமற்ற நடவடிக்கையை எதிர்க்க வேண்டும் என்ற உணர்வுள்ளவர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டிருந்தார்கள் என்பதை மறுக்கமுடியாது.

இந்த ஊர்வலத் தின்போது உலகத் தமிழர் இயக்கத்தால் விநியோகிக்கப்பட்ட பிரசுரத்தில் மேற்கு நாடுகள் இலங்கையரசுக்கு ஆயுத விற்பனை செய்வதை அம்பலப்படுத்தியிருந்ததுடன், சொந்த நாடே நிரந்தரத் தீர்வு என்பதையும் அழுத்தமாகக் குறிப்பிட்டிருந்தார்கள். இவை நியாயமானதாக இருந்த போதிலும்,புலிகளின் ஆயுதங்கள் சொந்த மக்களுக்கு எதிராகவுமல்லவா நீட்டப்பட்டுள்ளன.ஒருவேளை "நாங்களும் வாழ்வோம்,தமிழீழத்தையும் வாழவைப்போம்" என்ற பிரசுரத் தலைப்பில் "நாங்கள்" என்று குறிப்பிடுவது புலிகளைத் தானோ?!நாம் வைக்கும் கோரிக்கை என்னவெனில் முதலில் மக்களை வாழ விடுங்கள் என்பதே.

ஊர்வல முடிவில் உலகத்தமிழர் இயக்க ஜேர்மனிக் கிளையின் தலைவரினதும்,அதையடுத்துப் புலிகளின் ஜேர்மனிக் கிளைக் கலாச்சாரக் குழுவின் தலைவரினதும் சொற்பொழிவுகள் இடம் பெற்றன.

"ஜேர்மானிய அரசு தமிழர்களைக் கொல்வதற்கு (சிங்கள,முஸ்லீம் மக்களையும் என்றும் சொல்லியிருந்தால் இன்னும் நியாயமானதாயிருந்திருக்கும்.அப்படிச் சொல்ல மாட்டார்களே!) இலங்கைக்கு ஆயுத விநியோகம் செய்வது மட்டுமல்லாது எம்மையும் பலிக்களத்திற்கு அனுப்ப முற்படுகிறது.எமக்குப் பிரச்சினை தீர்ந்துவிட்டால் இவர்கள் சொல்லாமலே நமது நாட்டிற்குத் திரும்புவோம்.எமது நாட்டு மண் வாசனையைச் சுவாசித்தாலே நாம் உயிர் வாழ்வோம்..."என்று கலாச்சாரக் குழுவின் தலைவர் உரையாற்றியதில் பிரச்சினை என்று இவர் அரச பயங்கரவாதத்தை மட்டுமன்றி,இயக்க அராஜகங்களையும் சேர்த்துத்தான் குறிப்பிடுகிறார் என்றால்,இவர் உரையுடன் எமக்கு முரண்பாடில்லை!.

ஊர்வலம் முடிந்து நாம் திரும்பி வருகையில் பஸ் பிரயாணத்தின்போது வரவு,செலவுகளைக் கணக்கிட்ட எமது நகரப் புலிப் பொறுப்பாளர்,குறிப்பிட்ட பணம் (ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களிடம் சேகரித்தது) மிகுதியாக

www.tamilarangam.net

இருப்பதாகவும், இப் பணத்தை "தேசிய பாதுகாப்பு நிதிக்கு" தாம் கொடுப்பதாகவும் அறிவித் தார்!!

இவ்வூர்வலம் நடந்து முடிந்த இரண்டொரு தினங்களுக்குள் புலி களின் தொலைபேசிச் செய்தி இப் படி அறிவித்தது:"இலங்கையர் சங் கம் என்ற அமைப்பு தாங்கள் வைக்க இருந்த ஊர்வலத்தை உல கத் தமிழர் இயக்கம் ஊர்வலம் வைத்துக் குழப்பிவிட்டதாக பிரச் சாரம் செய்கிறார்கள்.(கவனிக்க: உலகத் தமிழரின் இயக்கம் பற்றிய புலிகளின் கரிசனையை!).இலங்கை யர் சங்கம் என்ற பெயரில் இயங் கும் துரோகிகளின் முயற்சிகளை முறியடிக்க தமிழீழ மக்களை அணி திரளுமாறு வேண்டுகோள் விடுக்கி றோம்"

இந்தச் செய்தியைப் பற்றி அறி வதற்காக இலங்கையர் சங்கத் தைத் தேடித் திரிந்து,ஈற்றில் இச் சங்கத்தைச் சேர்ந்த சிலரை அணுகி விசாரித்துப் பார்த்தோம்.அகதி களை நாடுகடத்த இருக்கும் ஜேர் மன் அரசின் திட்டத்தை எதிர்த்து கையெழுத்துச் சேகரித்து மகஜர் அனுப்பும் நடவடிக்கையிலேயே இலங்கையர் சங்கம் ஈடுபட்டிருப் பதாகவும்,இது தவிர ஊர்வலமோ வேறு நடவடிக்கைக ளோ முன்னெ டுக்கப்படாததால் தாம் இலங்கை யர் சங்கம் குறித்து விமர்சனம் வைத்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

ஆக,இலங்கையர் சங்கமே செய்ய முனையாத ஊர்வலத்தைப் பற்றியதான புலிகளின் தொலை பேசிச் செய்தி அறிவிப்பிலிருந்து கீழ்கண்ட முடிவுகளுக்கு வரலாம்:

1. புலிகளைத் தவிர வேறெந்த அமைப்போ அல்லது குழுவோ எந்த அரசியல்,வெகுசன நடவடிக் கையில் ஈடுபட்டாலும் அதில் ஈடு படுபவர்கள் துரோகக் குழுக்களே!!. (உலகத் தமிழர் இந்தப் பட்டியலில் சேராததிலிருந்து அதன் பின்னணி யைக் கண்டுகொள்வது கஷ்டமாயி ருக்காது).இதுதான் புலிகள் இலங் கையிலும்,பிற நாடுகளிலும் கடைப் பிடிக்கும் வெகுசன சுதந்திரம்!!!.

2. முல்லைஹம் வாழ் தமிழர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலம் நடைபெறுவதற்குச் சில தினங்களு க்கு முன்பே புலிகள் இந்த அறிவி ப்பைச் செய்ததால்,மேற்படி ஊர்வ லத் தில் பங்குபற்றவிடாமல் ஆட்க ளைக் குழப்பவே இந்த அறிவிப்பு எனத் தெளிவாகிறது.புலிகளின் அறிவிப்பின் பின்பும் 17.07.1991 இல் நடைபெற்ற ஊர்வலத்திலும் சுமார் மூவாயிரம் பேர்கள் பங்கு பற்றினார்கள் என்றால்,அவர்கள் அகதிகளைத் திருப்பியனுப்பும் நட வடிக்கைகளுக்கு எதிராக மட்டும ல்ல,புலி மற்றும் ஏனைய இயக்க

அராஜகங்களுக்கு எதிராகவும் தமது எதிர்ப்பைத் தெரிவிக்குமுகமாகவே இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டார்கள் என நாம் எடுத்துக் கொண்டால் அது தவறாகுமா?

ஊர்வலங்கள் தவிர,உலகத் தமிழர் இயக்கமும்( WTM ),தமிழர் புனர் வாழ்வுக் கழகமும்( TRO ) இணைந்து வாராவாரம் பல நகரங்களில் சினிமாப்படம் காட்டி வருகின்றனர் .தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் அத்தனை கழிசடைப் படங்களும் ஒழுங்காகக் காண்பிக்கப்படுகின்றன.இதற்கு இவர்கள் முன்வைக்கும் காரணம்:"நலிவடையும் நம்மினத்தின் நலனுக்காக...!"

மக்களைத் தொடர்ந்து போதையில் வைத்திருப்பதற்கும், தாங்கள் சுரண்டிக் கொழுப்பதற்கும் முதலாளிகளால் வியாபாரம் செய்யப்படும் சினிமாப்படங்களுக்கும் "நலிவடையும் நம்மினத்தின் நலனுக்கும்" என்ன சம்பந்தம்? புலிகள் இங்குள்ள தமிழ் அகதிகளிடம் மாதாமாதம் பணம் சேகரிப்பது தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதைவிட இடையிடையே "அவசர கால நிதி","தேசியப் பாதுகாப்பு நிதி"என்ற பெயரிலும் நிதி இவர்களால் சேகரிக்கப்படுகிறது.இந்த நிதிகள் "நலிவடையும் நம்மினத்தின் நலனுக்காக" பயன்படுத்தப்படுவதில்லையா?அத்துடன் புலிகளின் கலாச்சாரப் பிரிவே சொந்தமாக ஒரு கலைக்குழுவை வைத்திருக்கிறது.இக் குழு நாட்டிய நாடகங்கள்,இசை நிகழ்ச்சிகள் என்பன(வற்றை) மேடையேற்றி வருகின்றன.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

( இவைகளின் உள்ளடக்கம் என்ன என்பது வேறு விடயம்).இந் நிகழ்ச்சிகள் மூலம் "நலிவடையும் நம்மினத்தின் நலனுக்காக" நிதி சேகரிக்காமல் அபத்தமான சினிமாக் குப் பைகளை காட்டுவதன் அர்த்தம் என்ன?

ஹொலிவூட் படங்களை வைத்து அமெரிக்க அரசும்,இந்தியப் படங்களை வைத்து இந்திய அரசும், இந்த அரசுகளை அண்டியவர்களும் தமது நலன்களைக் காப்பாற்றிக் கொள்வதைப் போல,புலிகள் இந்தப் படங்களைக் காட்டி காசு வாங்குவதன் மூலம் "நலிவடையும் தமது நலனுக்காக"வே இந்த வழியைக் கையாளுகிறார்கள் என்று கருதுவது தவறாகுமா?!(தமிழ் மக்களின் நலன்கள் புலிகளுடன் பிணைக்கப்பட்டுள்ளனவாயினும்,புலிகளின் நலன்கள் அனைத்துமே மக்களின் நலன்களாகி விடாது).

இலங்கையரசுக்கு எதிரான இராணுவ யுத்தத்தில் "இன்று" களத்தில் புலிகள் நின்றாலும் -

மாற்றுக் கருத்துகளைக் கொண்டிருந்தார்கள் என்பதற்காக (கவனிக்க: கருத்தை மட்டும் வைத்திருந்ததற்காக) மக்களின் விடுதலையை நேசிக்கும் சுமார் 2,000 பேர்களை "கைது" செய்து தாங்கள் சித்திரவதை முகாம்களில் அடைத்து வைத்துக் கொடுமைப்படுத்துகின்ற,

வெகுசன,சனனாயக இயக்கங்களையும்,பிற போராளி அமைப்புகளையும் தடை செய்திருப்பதுடன், அவற்றில் ஈடுபடுவர்களைக் கொன்று வருகின்ற,

புலிகளின் ஊர்வலம்,கூட்டம்,கல்விச்சேவை,கலாச்சார நிகழ்ச்சிகளில் (இவற்றில் ஓரளவு நியாயமான தன்மைகள் இருந்தபோதிலும்) மக்களின் உண்மையான விடுதலையை நேசிப்பவர்களும்,மனிதாபிமான உணர்வுள்ளவர்களும் எப்படி பங்குகொள்ள முடியும்?

மக்களின் அடிப்படைச் சுதந்திரங்களான கருத்து,எழுத்து,பேச்சு சுதந்திரத்தை இலங்கையின் தமிழ்ப்பகுதிகளில் ஆயுதங்கள் மூலம் முற்றாகத் தடை செய்தும், வெளிநாடுகளில் இதற்கு முயன்றும் வருகின்ற புலிகள் "உலகத் தமிழர் இயக்கம்" என்றோ,"அகிலச் சைவத் தமிழர் இயக்கம்" என்றோ,"தமிழர் புனர்வாழ்வுக் கழகம்"என்றோ எத்தனை பெயரில் இயங்கினாலும்,இது குழந்தையைக் கழுத்தைத் திருகிக் கொன்றுவிட்டு விதம் விதமான பொம்மைகளைக் காட்டி அழவேண்டாம் என்று சொல்வது போலல்லாமல் வேறென்ன?!

* மணிவண்ணன்
* கிருஷ்ணா

---

அட்டைப்படம்: ஜீவன்

www.tamilarangam.net

# விடு - தலை

மூன்று முற்போக்குச் சக்திகள்
மிச்சமாயிருந்த நேரத்தில் கூடி
முடங்கிக் கிடந்த தமிழ் "பேசும்" மக்களின்
விடுதலையை முழுமையாக ஆராய்ந்த வேளை....

மக்களின் விடுதலை தமிழ் ஈழம்தானோ?
என்ற கேள்வி குடையவே செய்தது!

தரங்கெட்ட சாதிக் கொழுப்பு,
பிரிபடும் பிரதேச வேறுபாடு,
கொடி போடும் சீதனக் கொடுமை,
கலபடா ஆண்டவன் கொள்கை,
எடுபடா ஏழையின் வாழ்க்கை.....

இவை பற்றி அலசுகின்ற வேளையில்
வெளியேயிருந்து ஒரு வீரத்தின் குரல்
"எடடா ஏ.கே.யை" என்றது !

கதிகலங்கி,மெய் பதறி
குதிபட ஓடிய கொள்கைக் குன்றங்களை
குறுக்கிட்டு மறித்த நல்ல உள்ளம் ஒன்று
"என்ன கண்டீர்கள் அண்ணே?"என்றதற்கு
"விடு'தலை'யைத் தம்பி!"என்றது
ஓடிவந்த ஒரு அனுபவ முற்போக்கு.


*

ஜனா

www.tamilarangam.net

எப்பிடி..கனநாளாய் உன்னைக் காணேலை? தேசத்திலை நல்ல விசயங்கள் நடக்கிற நேரத்திலை யெல்லாம் நீ தலைமறைவாகிவிடு கிறாய்.." என்று தொடங்கினார் நண்பர்,நான் போய்ச் சேர்ந்ததும் சேராததுமாக.

"நான் ஒன்றும் தலைமறைவாக வில்லை... வவுனியாவரை போய் விட்டு வந்தேன்.அது சரி அப்பிடி என்ன நல்ல விசயங்கள் நடக்குது? நான் கேள்விப்படவில்லையே?" என்றேன் நான்.




"அந்த நல்ல விசயங்கள் ஒரு பக்கத்திலை இருக்கட்டும்.அதைப் பற்றிப் பிறகு கதைப்பம்.வவுனியா விலை என்ன புதினம்?"

"வவுனியாவிலை என்ன புதி னம்? வவுனியாவுக்கு அங்காலை தான் புதினம். ஆனையிறவுச் சண் டைக்குப் பிறகு ஆமிக்காறருக்கு வலு புளுகம்....."

"அரசாங்கத்திற்கு இந்த வெற்றி ஒரு பெரிய சாதனைதான்...என்ன புதினம் அங்காலை...?"

"நான் போய்வந்த நாளைக் குள்ளை அங்காலை இருந்து ஒரு சனமும் ஒழுங்கா வரத் தொடங் கேலை.அதாலை விபரமாய் சொல் லேலாமல் இருக்கு. என்டாலும் வவுனியாவிலை சனம் கதைக்கிற

www.tamilarangam.net

ளைதப் பார்த்தால் ஆமிக்காறர் வெளியிலை சொல்லுறதைவிட மூண்டுமடங்கு பேர் இராணுவத்திலை செத்திருக்கினம்.மற்ற அழிவுகளும் எக்கச்சக்கமாம்"

"அது தெரிஞ்சதுதானே! சண்டையைப் பற்றி என்ன சொல்லுயினம்?"

"வவுனியாவிலை இருக்கிறவையைப் பொறுத்தவரை சண்டையிலை புலியள் தோத்தது உடனடியாய் வந்திருக்கக்கூடிய பிரச்சினையைத் தவிர்த்தாலும் கூட,ஒரு வகையான இழப்பை அவர்கள் உணர்வதாகத் தெரிகிறது...."

"புலிகள் தோத்ததுதான் நல்லது. இப்பிடியே புலி முழுதாக அழிந்தால்தான் நல்லது எண்டு ஒருதரும் சொல்லேலையோ?"

"நான் சந்திச்சாக்கள் ஒருதரும் அப்பிடிச் சொல்லேலை.கிட்டத்தட்டப் பத்தாயிரத்திற்கு மேலை ஆமியைக் குவிச்சுத்தான்,எக்கச்சக்கமாய் பலி குடுத்துத்தான் அவை வெண்டிருக்கினமாம். என்னண்டாலும் புலியள் தோக்கிறது – எங்களுக்கை எவ்வளவு பிரச்சினையெண்டாலும் – அநியாயம்தானே? எங்கடை தமிழ்ப் பெடியனெல்லே சாகுதுகள் எண்ட அபிப்பிராயம்தான் பொதுவாயிருந்தது.அதோடை இன்னும் ஒண்டு.தோத்தது புலியளின்ரை மோட்டு வேலையாலை எண்ட அபிப்பிராயமும் இருக்குது"

"அதென்ன அது..?"

அதைக் கேட்கிற சுவாரஸ்யத்தில் கதிரையைக் கிட்ட இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார் நண்பர்.

"கோட்டை,கொக்காவில்,மாங்குளம் எண்டு அடுத்தடுத்து புலியளின்ரை தாக்குதல் தொடர்ச்சியா ஒரேமாதிரித்தானே இருந்தது.எல்லாத்திலையும் பெரியளவிலை ஆக்களை குவிச்சுத் தாக்கி நிர்மூலமாக்கிற பாணிதானே கையாளப்பட்டது. அதே பாணிதான் இங்கேயும் நடந்தது.அது ஒரு மோட்டுத்தனமான வேலை என்று ஒருத்தர் சொன்னார்"

"ஏன்..?"

"புலியள் தொடர்ந்து ஒரே மாதிரியான யுத்தத்தை கடைப்பிடிச்சால்,இராணுவமும் ஒரே மாதிரியே தோத்துக்கொண்டிருக்கிறதுக்கு அவங்கள் என்ன ஆகலும் மோடங்களே.சும்மா மோட்டுச் சிங்களவங்கள் எண்டு சொல்லிச்சொல்லி உண்மையிலேயே அவங்களை மோடங்களெண்டு புலியள் நினைச்சிட்டாங்களோ என்னவோ எண்டு சொன்னார் அவர்..."

"ம்.. முக்கியமான விசயம்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேறை என்ன சொன்னார் அவர்?"

"அவர் சொன்னதன் சாரம் என்னவென்றால்,புலிகளின் ஒரே மாதிரியான யுத்தமுறை இம்முறை இராணுவத்திற்கு பதில் தாக்குதல் தொடுக்க வசதியாக்கிவிட்டது. கொக்காவிலிலோ, மாங்குளத்திலோ ஏன் கோட்டையிலோ இல்லாத வசதிகள் பல இங்கு இராணுவத்திற்கு இருந்தது.ஒன்று,அதன் திறந்தவெளி அமைவிடம்.இரண்டு, திட்டமிட்டு உருவாக்கப்பட்ட மிகவும் பாதுகாப்பான முகாம்.மூன்று, சகதியும்,சேறும்,அகழியும் கொண்ட இயற்கைப் பாதுகாப்பு அதற்கு இருந்தது.நாலாவது,கடந்த கோட்டைத் தாக்குதல் காலத்திலிருந்தே பரவலாக <<யாழ்ப்பாணம் முதல் கொழும்பு வரை புலிகள் ஆனையிறவைத் தாக்கப் போறாங்கள்>> என்று பரவலாகக் கதை அடிபட்டதால் இராணுவம் தயாராகவே குறைந்தபட்சம் 3 மாதங்களுக்குப் போதிய உணவு,ஆயுத வகைகளைச் சேமித்து வைத்திருந்தது.இதைவிட முக்கியமானது முன்பிருந்ததைவிட இலங்கைப் படைகளின் தொகை அதிகரித்திருந்தது.இராணுவமுகாம் அமைந்துள்ள இடத்தின் பிரதேசப் பூகோளத்தைப் புரிந்துகொண்டவருக்கு இராணுவத்திடமிருந்து முகாமுக்குப் பாதுகாப்பாகத் தரைப்படை ஒன்று வருவதாக இருந்தால் (ஏற்கெனவே கோட்டையில் இது நடந்தது!) அது நிச்சயமாக ஆழியவளையிலிருந்து வெற்றிலைக்கேணியூடாக சாலை வரையுள்ள எங்காவது ஒரு இடத்தினூடாக கடல் மார்க்கமாக இறங்கியோ அல்லது விமான மார்க்கமாக (வடமாராட்சி ஒப்பிரேசன் லிபரேசன் பாணியில் தரையிறக்கியோ) வரக்கூடும் என ஊகித்திருக்க முடியும்.ஏற்கெனவே முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் புலிகள் தம்மைப் பலப்படுத்தியிருந்தாலும் கடல் மார்க்கமாக கொண்டுவந்து குவிக்கப்பட்ட பெருந்தொகையானோரை ஈடு கொடுக்க அவர்களுக்கு முடியாமல் போய்விட்டது. கடற்கரை ஓரங்களில் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருக்க வேண்டும் அல்லது அவர்களைக் கூடுதலான காலம் தடுத்திருக்கக்கூடிய,தாமதிக்க வைத்திருக்கக்கூடிய வழிகள் கையாளப்பட்டிருக்க வேண்டும். நடவடிக்கைகளைப் பார்த்தால் புலிகள் அப் பகுதியிலிருந்து தாக்குதல் எதிர்பார்க்கவில்லைப் போலவும்,இராணுவமுகாமை மிகச் சொற்ப நாட்களுக்குள் பிடித்து விடலாம் என்ற நம்பிக்கை இருந்தது போலவும் தெரிகிறது.வான் படையின் பாதுகாப்புடன் கப்பல்களிலிருந்து பறிக்கப்பட்ட பெருந்தொகையான துருப்புகளின் இந்த நடவடிக்கை,புலிகளின் பெருந்தொகையான ஆட்களைக் குவிக்கும் திட்டத்தை முறியடிக்கும் அதே மாதிரியான, அதே பாணியிலான ஒரு திட்டமே.வெற்றிலைக் கேணி கடற்கரையிலிருந்து கட்டைக்காடு மத்திவரை இராணுவத்

www.tamilarangam.net

## நகைச்சுவை!

*எமது காலத்தில் ஆனந்த குமாரசாமி,சேர்.பொன். இராமநாதன்,சேர்.பொன்.அருணாசலம்,சேர்.ஜேம்ஸ் பீரிஸ்,ஜோர்ஜ ஆர்.டி.சில்வா,டி.வி.ஜாயா போன்றவர்கள் எதுவித இனபேதமுமின்றி 'சிலோன் காங்கிரஸ்'என்ற அமைப்பின் கீழ் ஒற்றுமையாகப் போராட்டம் நடாத்தினார்கள்.ஆனால் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் நாம் எப்படி இந்த ஒற்றுமையை இழந்தோம் என்பது சிந்தித்துப் பார்க்க ஆச்சரியமான விடயமாகவுள்ளது.*
*(ஆனந்தகுமாரசாமி ஞாபகார்த்தப் பேருரையில் ஜே.ஆர்.)*



திற்கு பெரிய எதிர்ப்பு இருக்கவில்லை என்பதே புலிகளின் தப்பான கணிப்பீட்டைக் காட்டுகிறது. ஆக மொத்தத்தில் அவரது அபிப்பிராயத்தைப் பார்த்தால் ஆனையிறவு முகாம் மீதான தாக்குதலுக்குப் புலிகள் பலிகொடுத்த உயிர்களும், காயப்பட்டவர்களினதும் எண்ணிக்கையும் மிக அதிகமாக இருந்ததற்கு காரணமே அவர்களின் முரட்டுப் பிடிவாதமான திட்டமிடல், மனித உயிர் பற்றிய பொறுப்பீனம், எதிரியின் தன்மை பற்றிய சரியான கணிப்பின்மை என்பவற்றால் ஆனது என்பதே..."

"இது ஒருவகை இராணுவரீதியான மதிப்பீடு.ஆனால் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பவை இவை மட்டுமல்ல.." என்று இமுத்தார் நண்பர் நான் சொன்னதைக் கேட்டபின் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு.

"ஏன் இந்த மதிப்பீடு பிழை என்கிறாயா?"என்று கேட்டேன் நான்.

"பிழை என்று சொல்லவில்லை. மதிப்பீட்டில் சில குறைபாடுகள் இருக்கின்றன.ஒன்று புலிகளுக்கு இத்தகையதொரு எதிர்பாராத் தாக்குதல் நடக்கலாம் என்பது தெரிந்திருக்கவில்லை என்று அடித்துச்சொல்ல முடியாது.முன்னியான், கட்டைக்காடு பகுதிகளில் நடந்த பலத்த தாக்குதல்கள் இதைக் காட்டுகின்றன.பெருமளவில் குவிக்கப்பட்ட படைகளை எதிர்த்துத் தாக்குவதற்கும்,முகாமைத் தாக்கவும் போதியளவு <<படையினர்>> புலிகளிடம் இருந்தார்களா என்பது தெரியாமல் இதுபற்றிச் சொல்ல முடியாது.புலிகளின் சுற்றிவளைத்துத் தாக்கும் யுக்தியை இராணுவம் ஏற்கெனவே காரைநகர்,காங்கேசன்துறை,முல்லைத்தீவுப் பகுதிக

www.tamilarangam.net

னில் உடைத்துள்ளது.இராணுவ முகா முக்குப் பதில் இராணுவக் கிராமங் களை அங்கு அது உருவாக்கியுள் ளது.எனவே அரசபடையின் புதிய பதில் தாக்குதல் முறை இது என்று சொல்ல முடியாது.ஒப்பிறேசன் பல கேய முகாமினை வந்தடையாமல் விட்டிருந்தால் கூட புலிகளால் வென்றிருக்க முடியுமா என்பது சந் தேகமே... முதலில் உமி,வைக் கோல் போன்றவற்றை எரியூட்டி புகைமண்டலத்தை ஏற்படுத்தியும், பொம்மைகளை நிறுத்தியும் எதிரி யைத் தடுமாறச் செய்து முன்னே றிய புலிகள் இராணுவத்தினரின் கூற்றுப்படியே கிட்டத்தட்ட 60சத வீதப் பகுதிகளைப் பிடித்துவிட்டி ருந்தார்கள்.ஆனால் அவர்கள் எதி ர்பார்த்தளவு விரைவாக அது நடக் கவில்லை.இந்தக் காலக்கெடுவுக் குள்ளேயே புலிகள் தரப்பில் காயம் பட்டோர் தொகை மிகவும் அதிக மாகிவிட்டது.ஏற்கெனவேஇராணு வத்தினரால் இடப்பட்டிருந்த பொறிக்கிடங்கு அகழிகளுள் வீழ் ந்து இரண்டு,மூன்று பிரிவுகள் ஏற க்குறைய முற்றாகச் சிதைந்துவிட் டன."

"ஈரோஸ் முன்னாள் எம்.பி. பரா இறந்ததும் இப்பிடி ஒரு அகழிச் சரிவில்தான் என்று வவுனியாவில் கதைத்தார்கள்"

"கேள்விப்பட்டேன். புலிகள் போருக்குப் புறப்பட முதல் 500, 600 சவப்பெட்டிகள் வரை தயார் செய்துவிட்டுத்தான் போருக்குப் புற ப்பட்டிருந்தார்களாம்.500 பேர் சாவதைவிட அதேயளவு தொகையி னர் காயப்படுவதுதான் இயக்கத்து க்கு மிகவும் கஷ்டம்!காயப்பட்டவர் களைப் பராமரிப்பது செத்தவர் களை எரிப்பது/புதைப்பது என்ப தைவிடக் கடுமையானதல்லவா?

போர் 500,600 பேரின் மிஞ்சி னால் 1,000 பேரின் உயிரிழப்புடன் மிகச் சிலநாட்களுக்குள் முடிவதாக இருந்தால் பிரச்சினையில்லை. நிலைமை வேறுவிதமாகிவிட்டது. போர் உடனடியாக முடிக்கப்படக் கூடியதாக இருக்கவில்லை.உனக் குச் சொன்னவர் சொன்னது போல முகாமை வேகமாக அண்மிப்பது முடியாதளவு அது இயற்கைப் பாது காப்புள்ளதாக இருந்தது.மருத்து வப் போக்குவரத்து மற்றும் பராம ரிப்பு வசதிகள் மிகவும் குறைந்த ஒரு இடத்தில் முதல் 10 நாள் போரிலேயே 500க்கு மேற்பட் டோர் காயப்பட்டதும், யுத்தம் தொடர்ந்தால் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதும் ஒரு நெரு க்கடியாகவே இருந்திருக்கவேண் டும்.புலிகளுக்கும் சரி,இராணுவத் திற்கும் சரி மிகவும் பாதகமானது இந்தப் பிரதேசம் வெளியாக இரு ப்பது.எனவே தொடர்ந்து புலிக ளால் தாக்குப்பிடிப்பதில் நிறையச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கும்.எனவே அப்போதும் வெற்றி சந்தேகமே..."

www.tamilarangam.net

"ஏன்? முகாமிலுள்ளவர்களுக்கு உணவு கிடைக்காமல்,மருத்துவ வசதி இல்லாமல் செய்யும் முற்றுகை பலனளித்திருக்காது என்கிறாயா?" என்று கேட்டேன் நான்.

"கிட்டத்தட்ட 3 மாதத்திற்கு அவர்களால் தாக்குப் பிடித்திருக்க முடியும் என்றே நான் நினைக்கிறேன்.ஆனால் 3 மாதத்திற்குள் இராணுவத்தினதும்.விமானங்களினதும் குண்டு வீச்சுகள் அப் பகுதியையே சுடுகாடாக்கிவிட்டிருக்கும். புலிகளின் முற்றுகை பூரண வெற்றி பெறுவது வெறும் இராணுவ பலத்தில் மட்டுமல்ல,மக்களின் ஆதரவிலும் தங்கியிருப்பதால் அதுவும் சந்தேகமே..."

"ஏன் மக்கள் யுத்தத்திற்கு ஆதரவு தரவில்லை என்று நினைக்கிறாயா?இறுதி யுத்தம் என்று புலிகள் அறிவித்ததாலும்,பெரியதொரு இழப்பை அவர்கள் எதிர்பார்த்தே சண்டையில் இறங்கியிருந்ததாலும் மக்களை இதற்காக ஒராண்டு காலமாக தம் கருத்துக்குச் சார்பாக மாற்றியிருந்ததாலும் அவர்களுக்கு நிறைய ஆதரவு இருந்ததாகவே அவர் சொன்னார்.மக்களிடமிருந்து பொரிவிளாங்காய்,கடலை வறுவல், முட்டைமா,பயத்தம் பணியாரம் என்று இலகுவில் பழுதாகாத உலர் உணவுகள் நிறையக் கிடைத்ததாகவும்,காயப்பட்டோரைப் பராமரிக்க மக்களிடையே பல தொண்டர்கள் உருவாக்கப்பட்டு அது மிகவும் வெற்றிகரமாக நடந்ததாகவும் சொன்னார் அவர்.அப்படி இருக்க நீ எப்படி இப்பிடியான முடிவுக்கு வந்தாய் எண்டு எனக்கு ஆச்சரியமாயிருக்கு"என்றேன் நான்.

"உண்மைதான்.ஆனால் புலிகளின் படை திரட்டலுக்கும்,இராணுவத்தின் படை திரட்டலுக்கும், படை பலத்திற்கும் வேறுபாடு உண்டு.புலிகளின் படை திரட்டல் யுத்தத்தின் நியாயத்தன்மையிலும்,அதன் வெற்றியிலும் தங்கியிருக்கிறது.சர்வதேச ரீதியாக அதற்குள்ள தார்மீக ஆதரவில் தங்கியுள்ளது.அதன் அரசியல் முன்முயற்சியில், சனனாயகக் கோட்பாட்டில் தங்கியுள்ளது.இவை எல்லாவற்றிலும் புலிகளுக்குப் பலவீனமான அம்சங்களே இருந்தன. அரசுக்கோ தார்மீக ஆதரவு,அரசியலில் பிரச்சார ரீதியான முன்முயற்சி,இராணுவத் தளபாட,பயிற்சி, ஆட்சேர்ப்புக்கு தடையற்ற வாய்ப்பு என்ற அனைத்திலும் முன்பைவிடப் பலமான தன்மை இருந்தது. ஒரு குறிப்பிட்ட யுத்தத்தில் யார் வெல்வது,தோற்பது என்பது அதன் தன்மையை அதாவது இடவமைவு,இராணுவபலம், திறமை,ஆயுதம் என்பவற்றோடு பின்னணிப் பலம்,தார்மீக ஆதரவு அனைத்தும் இணைந்துதான் தீர்மானிக்கப்படுகிறது. இவற்றில் ஒன்றில் பலமாயும் மற்றதில் பலவீனமாயும் இருந்தாலும் கூட வெற்றி சாத்தியம். புலிகளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாங்குளம்,கொக்காவில்,கோட்டை யுத்தங்களைப் போலல்லாது இதில் அது எல்லாவற்றிலும் பலவீனமாக இருந்தது.எனவே <<இறுதி யுத்தம்>> என்ற முழக்கம்தான் கொஞ்சமாவது மக்களை அதன்பால் ஈர்த்தது என்று சொல்லலாம்.மற்றப்படி வாய் திறக்க முடியாத அச்சம்தான் <<ஆதரவு>> என்ற நிலையை உருவாக்கியுள்ளது என்றே நான் நினைக்கிறேன்.உனக்கு வவுனியாவில் சொன்ன நண்பர் ஆனையிறவு பற்றியோ,புலிகளின் பிற நடவடிக்கைகள் பற்றியோ அபிப்பிராய பேதமுள்ளவர்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்று சொல்லவில்லையா?" என்று கேட்டார் நண்பர்.

"சொன்னார்.மிளகாய்த் தூள், காரக் கொச்சிக்காய் சிவல்கள் என்பன வாயில் போடப்பட்டு வாயை மூடி பிளாஸ்ரர் ஒட்டப்பட்டதாம்!"

"இது மட்டுமல்ல,இப்பிடி எத்தினையோ... புலிகள் முஸ்லீம்களை 2,000 ரூபா பணமும்,1 பவுணும் மட்டும் எடுத்துச் செல்ல அனுமதித்துவிட்டு உடனடியாக வெளியேறும்படி கூறியதும்,அவர்களிடமிருந்து மற்றச் சொத்துக்கள் எல்லாவற்றையும் பிடுங்கி எழிலகத்தில் (பழைய B.M.C.) போட்டு விற்றதும்,தப்பித் தவறி நண்பர்களான முஸ்லிம்களின் உடமைகளை பாதுகாக்க ஒப்புக்கொண்டவர்களை அடித்தும்,பொருட்களைப் பறிமுதல் செய்துவிட்டு 50,000 முதல் 1,00,000 வரை தண்டம் விதித்ததும் இன்னும் இதுமாதிரியான செய்கைகளும் யாருக்கும் தெரியாததல்ல.ஏதாவது பொய்க் காரணங்களைக் காட்டி அவர்களுக்கு விண்ணப்பித்து ஏமாற்றிக் கொழும்பு நோக்கி ஓடி(தப்பி)வருபவர்கள் வவுனியா தாண்டியதும் நிம்மதிப்

## நகைச்சுவை!



*இலங்கையில் சிங்களவர்,தமிழர்,முஸ்லிம்கள்,பறங்கியர் அனைவரும் சுயகௌரவதுடன் வாழலாம்.யாருக்கும் அநீதி இழைக்கப்படமாட்டாது.வன்முறையை வெறுப்போம்.அஹிம்சை வழியில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒன்றுபடுவோம்.*

*(முஸ்லீம் காங்கிரஸின் 10ஆவது வருடாந்த தேசியமகாநாட்டில் பிரேமதாச)*

www.tamilarangam.net

பெருமூச்சுடன் புலிகளைத் திட்டுவதையும் நீ கண்டிருப்பாய்.இது எல்லாம் போர் 3 மாதம் நீடித்திருந்தால் புலிகளால் தாக்குப்பிடிக்க முடிந்திருக்குமா என என்னைச் சந்தேகிக்க வைக்கின்றன... தவிரவும் உனது வவுனியா நண்பர் சொன்னதுபோல புலிகளிடம் எதிரியின் தன்மை பற்றிய சரியான மதிப்பீடு இல்லை என்பதும் முழுக்கச் சரியென்று நான் நினைக்கவில்லை.தம்மைப் பற்றிய சரியான மதிப்பீடின்மையே அவர்களது கோளாறு என்பது என்னுடைய அபிப்பிராயம்..."

நான் எதுவும் பேசவில்லை. மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன்.இதற்கு மேல் என்ன சொல்ல இருக்கிறது... தப்பித் தவறி நண்பரின் கணிப்பீட்டின்படி அல்லாமல் புலிகள் வென்றிருந்தாலும் கூட என்னதான் பெரிதாக நடந்திருக்கப் போகிறது?அப்படி நடந்திருந்தால் புலிகளால் நிச்சயமாக இராணுவமுகாமைத் தகர்த்திருக்க முடியும். ஆனால் அது ஏதாவது புதிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்குமா?ஒருவேளை புலிகள் கௌரவமாக அரசுடன் பேசப் போயிருக்க முடியும். வேறென்ன நடந்திருக்கும்... என்று யோசித்துக்கொண்டிருந்தேன்.

"ஆனையிறவு முகாம் உடைக்கப்படுவது புலிகளைப் பொறுத்தவரை ஒரு முகாமை அழித்தது என்பதற்கு மேல் அவர்களுக்கு வேறெந்த வசதியையும் புதிதாக ஏற்படுத்தியிருக்குமா என்பதும் சிந்தனைக்குரியது.புலிகளின் சிறிய முகாம்கள் மீதான தாக்குதல்களுக்குப் பிறகு இராணுவம் <<பெரிய முகாம்களும், நடமாடும் படைப் பிரிவுகளும்>> என்ற தந்திரத்தைக் கையாளத் தொடங்கியுள்ளது.கீரிமலை,பலாலி, வசாவிளான் என்ற மூன்று புள்ளிகளை இணைக்கும் முக்கோணப் பகுதியை இப்போது இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. புலிகள் அதனுள் ஊடுருவவோ,அதை தாக்கி உடைக்கவோ முயன்றதாகத் தெரியவில்லை.குரும்பசிட்டி, கட்டுவன்,வறுத்தலைவிளான்,மயிலிட்டி. தையிட்டி, காங்கேசன்துறை என்ற பகுதிகள் முழுவதும் இப்போது வெற்றிடமாக்கப்பட்டுள்ளன. இப்பகுதியை மேலும் விஸ்தரிப்பதில் அரசு அவ்வளவு முயன்றதாகவும் தெரியவில்லை.புலிகளும் இதை உடைக்க முயலவில்லை.இப்படியே காரைநகர்,முல்லைத்தீவுப் பகுதிகளிலும்,வவுனியாவிலும் நிலைமை இருக்கிறது.சிறிது தூரம் முன்னேறித் தாக்கிவிட்டுத் திரும்பி வந்து முகாமில் இருப்பதாகிய ஒரு சமநிலையை தற்காலிகமாகப் பேணவே இராணுவம் விரும்புகிறது.அரசின் பேச்சுவார்த்தயோ,பிற அரசியல் முயற்சிகளோதான் ஏனையவற்றைத் தீர்மானிக்க முடியும் என்ற போக்கே அங்கே நிலவுகிறது. ஆனால் அதன் நீண்டகால நோக்கம் முழுமையான ஆதிக்கத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்படுத்துவது என்பதில் ஐயமில்லை. ஆனால் புலிகள் எங்கே தாம் கவனம் செலுத்த வேண்டும் என்பதையும், எதைச் செய்யத் தமக்குச் சக்தி இருக்கிறது என்பதையும் யோசித்துச் செயற்படவேண்டும் என்பதை ஒரு முக்கியமான விடயமாகக் கருதுவதே இல்லை. என்னைப் பொறுத்தவரை நான் எப்போதும் புலிகள் மற்றும் அரசு தொடர்பாக நினைப்பது இதுதான்: அரசின் ஒவ்வொரு வெற்றியும் தமிழ் மக்கள் மீது புதிய விலங்கு போடுவதாக இருக்கிறது. புலிகளின் ஒவ்வொரு வெற்றியும் ஒருவகை அச்சம் கலந்த அங்கலாய்ப்பை ஏற்படுத்துகிறது..."

எனக்கு இது பற்றித் தொடர்ந்து பேசுவதில் இஷ்டம் இருக்கவில்லை. இது பற்றி எத்தனை தடவைதான் பேசுவது? ஆனால் இந்தப் போரின் வெற்றிக்குப் பிறகு வழமைபோல துள்ளிக் குதித்து அறிக்கை விடும் அரசு, <<இது ஒரு மகத்தான வெற்றிதான். ஆனால் அதிகம் சந்தோசப் பட முடியாதளவு பெரும் இழப்பும் ஏற்பட்டிருக்கிறது>> என்று <<அடக்கமாக>> அறிவித்திருக்கிறது ஒரு முக்கியமான விசயமாக எனக்குப் பட்டது. எனவே அதுபற்றி நண்பரிடம் கேட்டு வைத்தேன்.

"இதுதான் நான் முதலில் சொன்ன நல்ல விசயங்கள்"என்று சிரித்தார் நண்பர்.

"அது என்ன?"என்று கேட்டேன் நான்.

"அரசாங்கம் இரகசியமாகப் பேச்சுத் தொடங்கிவிட்டது! லண்டனுக்கு பிரட்மன் போனது கிட்டுவுடன் பேசவல்ல என்பது சிலவேளை உண்மையாக இருக்கலாம். ஆனால் பேசுவதற்கான இரகசிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லையென்பது உண்மையல்ல என்றே எல்லோரும் கருதுகிறார்கள். இது ஒன்று. இரண்டாவது, பாராளுமன்றத் தெரிவுக்குழு விடயம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி. மங்கள முனசிங்கவின் கோரிக்கைப்படி அவரையே தவிசாளராகப் போட்டு ஒரு தெரிவுக்குழு இதுபற்றி ஆராய நியமிக்கப்படவுள்ளது. மூன்றாவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தன் பங்குக்கு இனப்பிரச்சினைக்குத் தனது தீர்வு என்ன என்ன ஆராய பதினொரு பேரடங்கிய குழு ஒன்று நியமித்துள்ளது. பதுளையில் நடந்த சனாதிபதி நடமாடும் அலுவலகத்தின் கல்வியமைச்சு அலுவலகத்தில் தமிழ் அறிவிப்புப் பலகை இல்லாததைக் கண்டு சீறினார் லலித் அத்துலத் முதலி! உடனடியாக அங்கு தமிழ் அறிவிப்புப் பலகை இடம் பெறச் செய்தார். இப்பிடிப் பல நல்ல விசயங்கள் நடக்குதுதானே!!..." என்றார் நண்பர் சிரித்துக்கொண்டே.

*(இரண்டாம் பகுதி 47 ஆம் பக்கம்)*

www.tamilarangam.net

# ஊமைக் குரலில்...

ஈழ மண்ணில்
மீண்டும் குருதி.
இங்கே
உறைவது பனியல்ல
எம்மவர் செந்நீர்.

இதையே
அவர்கள் சிந்தியபோது மட்டும்
தியாகிகளென்றும்,
வீரர்களென்றும்....
எங்கள் தெருவின்
ஓரச் சுவர்களில்
நினைவுச் சுமையாய்
வண்ணப் போஸ்ரர்கள்.

நேற்று முன் விஜிதரன்
கொல்லப்பட்டபோது
குரல் தந்த விமலேஸ்
நேற்றுடன் இல்லை.
பின் ராஜனி....

யார் சொன்னார்
இவர்கள் இறந்ததாய்?
விடுதலை அவர்க்கு
பதவி அரக்கர் பிடியிலிருந்து
விடுதலை அவர்க்கு.

கொடுமைகளை
இனிமேல்
யாரும் எழுதமாட்டார்கள்!
கொடுமைகள்
அற்றுப் போகவில்லை.
இவற்றை
எதிர்த்தவர்,
எழுதியவர்தான்
அற்றுப் போய்விட்டனர்.


என் பேனாவும்
மையைவிட மறுக்கிறதே.
நானும் எழுத மாட்டேனோ..?
இல்லை!
ஒரு பென்சில்
அல்லது ஒரு பென்சில் கூர்.
கிடைக்காவிட்டால்
ஒரு வெள்ளை சோக்கால்
எங்கோ ஓர் மூலைச் சுவரில்
எழுதிக்கொண்டேயிருப்பேன் .

எனது குருதி
உறையும் வரையும்
எழுதிக்கொண்டேயிருப்பேன்.

\#

செ.பாஸ்கரன்

www.tamilarangam.net




01.08.1991

தமிழ்நாட்டிலும்,ஒரிஸாவிலும் உள்ள சுமார் 2 இலட்சம் அகதிகளை அவரவர்களின் சொந்த இடங்களுக்கு திருப்பியனுப்புவதற்கான நடவடிக்கைகளை இலங்கையரசுடன் சேர்ந்து மேற்கொள்ள இந்தியா இணங்கியுள்ளது.அகதிகள் எந்தெந்த இடங்களைச் சேர்ந்தவர்கள் என்ற விபரமடங்கிய விரிவான பட்டியலொன்றை இந்தியா இலங்கையிடம் கையளித்துள்ளது.

உணவுத்திணைக்களத்தில் 40 கோடி ரூபாவரை மோசடி செய்யப்பட்டுள்ளது.இதில் உயரதிகாரிகள் பங்கெடுத்துள்ளனர்.

02.08.1991

நுவரெலியாப்பகுதியில் தமிழ் வாலிபர்களைக் கடத்துவது தொடர்ந்துகொண்டிருக்கிறது.

கடந்த 1 வருடகாலமாக காரைதீவுக் கிராமத்தில் அகதிகளாக வசித்துவரும் அம்பாறை நகரசுத்தித் தொழிலாளர்களும், சீனிக்கூட்டுத்தாபனத் தொழிலாளர்களுமான 207 குடும்பங்களைச் சேர்ந்த 975பேர் இன்றுவரை கிரமமான நிவாரணவசதிகளோ, குடியிருப்பு வசதிகளோ இன்றி பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இவர்கள் குடியிருந்த இடங்களில் சிங்களவர்கள் சட்டவிரோதமாகக் குடியேறி வருகி ன்றனர்.

03.08.1991

25ஆயிரம் பேருக்கு மேல் தஞ்சமடைந்துள்ள மடு அகதி முகாமில காய்ச்சல,மலேரியா, வயிற்றோட்டம் போன்ற நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.கட்டாக்காலிகளாகத் திரியும் விசர்நாய்களால் கடியுண்டு மாதம் 10பேர்வரை மரணமாகிறார்கள்.

ஆனையிறவுத் தாக்குதல்களில் இராணுவத்தினரால் பெருந்தொகையான வீடுகள்,கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.தென்னைத் தோட்டங்கள்,பனங்கூடல்கள் ,வயல்களுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளன.

யாழ்குடாநாட்டுப் பகுதியில் இரவுவேளைகளில் தொடர்ச்சியாக விமானக்குண்டுத் தாக்குதல்களும்,ஹெலித் தாக்குதல்களும் நீடித்தவண்ணமுள்ளன.

2ஆயிரம் பேருக்கு மேல் அகதிகள் உள்ள பம்பலப்பிட்டி அகதிகள் முகாமில் 4மலகூடங்களே இருப்பதால்,கடற்கரையைப் பாவித்த அகதிகளுக்கு அபராதம விதிக்கபபட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

04.08.1991

இந்தியாவில் பல இந்திய வம்சாவளியினர் விசாரணை என்ற பெயரில் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தாக்கப்பட்டுள் ளனர்.

05.08.1991

நான் வெளிநாடுகளுக்குப் போகாவிட்டாலும் அமெரிக்கா, டோக்கியோ, லண்டன் மற்றும் எல்லா நாடுகளுட னும் ரெலக்ஸ் மூலம் தொடர்புகொண்டு காரியம் சாதிக் கிறேன் - பிரேமதாச

மன்னார் நிலைமையை நேரில் கண்டறிய அங்கு சென்ற 150 குடும்பத் தலைவர்கள் திரும்பிவராததால் அவர்களின் குடும்பத்தவர் மத்தியில் சந்தேகமும், அச்சமும் ஏற்பட்டுள்ளது. அக் குடும்பத் தலைவர்களின் பெயர்கள் கல்பிட்டி அகதிமுகாம் நிவாரண விநியோகப் பட்டியலிலி ருந்து வெட்டப்பட்டுவிட்டன. கணவர்மாரை அங்கு தடுத்து வைத்துக்கொண்டு அவர்களது குடும்பத்தவரை மன்னாருக்கு வரச் செய்யும் அரசின் ஏற் பாடே இதுவாகும்.

06.08.1991

மட்டக்களப்பில் நிரந்தர வசிப்பாளர்களின் விபரம் திரட்டப்பட்டு அரசபடைகளிடம் ஒப் படைக்கப்படுகின்றன.

07.08.1991

நிதிக்கம்பெனிகளின் உதவியை நாடுவோர் தந்திரமான முறையில் சுரண்டப்படுகின்ற னர். வாகனம் போன்றவற்றை வாங்க ஆசைப்படுவோர் நிபந்தனைகள் குறித்து அலட்டிக் கொள்ளாமல் பத்திரங்களில் கையொப்பமிடுகின்றனர். இந் நிபந்தனைகளால் வாகனத் தின் விலையில் ஒரு பகுதியையே கடனாகப் பெற்றவர் கள் வாகனத்தின் பங்குதாரராக இல்லாமல் வாடகையா ளர் போலாகிவிடுகிறார். கடனுக்கு வட்டி என்ற பெயரில் வாங்கிய கடனிலும் பார்க்க பன்மடங்கு அறவிடப்படுகிறது.

08.08.1991

ஆனையிறவு முகாம் ஒரு கட்டத்தில் ஏறக்குறைய புலிகளிடம் வீழ்ந்துவிட்டது. அந்தத் தாக்குதல் வளைகுடாப் போர் போல இருந்தது _ முகாமின் இராணுவத் தளபதி.

மலையக மக்கள் முன்னணி உறுப்பினர்கள் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டு வருகின்ற னர்.

பதுளைப் பகுதியிலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் வீட்டில் வசிப்போரது விபரத்தை சிங்களத்தில் எழுதி வீட்டுக் கதவில் ஒட்டி வைக்கும்படி பொலிஸாரால் பணிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழ் அகதிக

www.tamilarangam.net

ளை இலங்கைக்குத் திருப்பி யனுப்புவது குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சும் , இலங்கையரசும் கூட்டாக ஆராய்ந்து வருகின்றன.

09.08.1991

தோட்டத்துரை பயிற்சியாளர் தெரிவில் முஸ்லிம்களும்,தமிழர்களும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். பயிற்சியாளர் தெரிவுக்கென நேர்முகப் பரிட்சைக்கு அழைக்கப்பட்ட முஸ்லிம்கள் ஒருவர் கூட தெரிவு செய்யப்படவில்லை. விண்ணப்பித்த தமிழர்கள் நேர்முகப்பரிட்சைக்குக்கூட அழைக்கப்படவில்லை.

உலகவங்கியின் யோசனையின் படி தோட்டங்களை தனியாரிடம் கையளிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. சுரண்டும் நோக்கத்தையே கொண்டுள்ள பல்தேசியக் கொம்பனிகளிடமும் ,வெளிநாட்டாரிடமும் தோட்டங்கள் கையளிக்கப் படவுள்ளன.

வடக்கு மாகாணமும்,கிழக்கு மாகாணமும் தொடர்ந்து இணைந்திருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பை பிரேமதாச 1992 பெப்ரவரி 24ஆம் திகதிக்கு மீண்டும் ஒத்திவைத்துள்ளார்.

10.08.1991

சம்மாந்துறையில் 7 முஸ்லிம் விவசாயிகள் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

தட்டுவான்கொட்டி கிராமத்தில் 100 தமிழர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

வடக்கிற்குக் கொண்டுசெல்ல 48வகைப் பொருட்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

12.08.1991

வடபகுதியில் உணவுப் பஞ்சம் முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு தலைதூக்கியுள்ளது. மண்ணெண்ணெய் கிடைக்காததால் மாலையானதும் குடாநாடு இருண்ட பிரதேசமாகிவிடுகிறது.

வடமாராட்சி, சாவகச்சேரி, மிருசுவில் பகுதிகளில் ஆகாய விமானத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

13.08.1991

அடையாள அட்டையின்றி தோட்ட இளைஞர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். அண்மைக் காலத்தில் இடம்பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகளின்போது இம் மக்கள் தமது அடையாள அட்டையைப் பறிகொடுத்துள்ளனர்.

15.08.1991

தோட்டத் தொழிலாளி ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து போக

www.tamilarangam.net

ந்தலாவ பகுதியைச் சேர்ந்த 30 தோட்டங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

அகதிமுகாம்களுக்கு வெளியேயுள்ள அகதிகளுக்கான உலர் நிவாரணம் நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து வடக்கில் மறியல் போராட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

16.08.1991

வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு அடுத்த ஆண்டில் அரசு 2,500கோடி ரூபாய் ஒதுக்குகிறது.

யுத்தத்தினால் மட்டக்களப்பில் 64ஆயிரம் குடும்பங்கள் தொழில்களை இழந்துள்ளன.

17.08.1991

வடக்கு-கிழக்கு யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டு எங்களைப்போல் இடம்பெயர்ந்து வந்த அகதிகள் எல்லோருக்கும் உணவு நிவாரணம் வழங்கப்படவேண்டும். இது சாத்தியமில்லையென்றால் எங்களுக்கும் இது தேவைப்படாது என்று கூறி காரைதீவு விபுலானந்த மகாவித்தியாலய அகதிமுகாமிலுள்ள அகதிகள் ஆர்பாட்டம் செய்ததுடன் தமது பெயர்களை அகதிமுகாம் பட்டியலில் பதியவும் மறுத்துவிட்டனர். இதனையடுத்து அருகிலிருந்த விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகள் அங்கு வந்தபோதும் முகாம் அகதிகள் ஒரேகுரலில் பெயர், விபரங்களைப் பதிய மறுத்து விட்டனர்.

ஊர்காவற்துறைக்கு அருகேயுள்ள நாராந்தனையில் கிணறுகளுக்குள்ளிருந்து 22 மனித எலும்புக்கூடுகள் கிராமத்தவர்களால் மீட்கப்பட்டன. கடந்த வருடம் ஊர்க்காவற்துறைப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது காணாமற்போன அப்பகுதி மக்களின் சடலங்களே இவையாகும்.

எமக்குரிய கச்சதீவை மீண்டும் பெறுவோம்-ஜெயலலிதா

19.08.1991

வாழைச்சேனையில் கூட்டுறவுச் சங்கங்களால் மாணவர் உணவு முத்திரைகளுக்கு தரமற்ற, பழுதடைந்த உணவுப் பொருட் கள் வழங்கப்பட்டு வருகின்றன.

20.08.1991

அம்பாறை மாவட்டத்திலுள்ள சவளக்கடையில் வைத்து வயலில் வேலைக்குச் சென்ற 19 தமிழர்கள் பொலிஸாரால் கடத்திச் செல்லப்பட்டு வெட்டியும், குத்தியும் கொல்லப்பட்டுள்ளனர்.

காரைநகர ,யாழப்பாணம ஆகிய இரு இடங்களிலுமுள்ள

www.tamilarangam.net

சீ-நோர் நிறுவனக் கிளைகள் மூடப்பட்டுள்ளன. இங்கு பணி யாற்றிய 250 ஊழியர்களுக் கும் தலைமையகத்திலிருந்து பதவி நீக்கக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 1 இலட்சத்து 45ஆயி ரம் பேர் தமது சுய தொழில் களை இழந்துள்ளனர்.

மாத்தளை ஆஸ்பத்திரியில் 56 கட்டில்கள் கொண்ட பிர சவ விடுதியில் 150 கர்ப்பிணி கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

21.08.1991 ______________

எங்கள் எதிரிகள் வளரும்படி நாங்கள் ஒருக்காலும் விடமா ட்டோம்.எங்கள் எதிரிகளைத் தீர்த்துக் கட்டுவோம்.இது தான் எங்களுக்கு வேதம் - புலிகளின் உறுப்பினர் வரதன்

நாங்கள் தகுதியான எதிரிகளு டனேயே மோதினோம்.பலம் மிக்க படைகளுடனேயே படை யினர் மோதவேண்டியிருந்தது - ஆனையிறவுத் தாக்குதல் பற்றி பிரிகேடியர்

நிவாரண உதவிகள் நிறுத்தப் பட்டதைத் தொடர்ந்து அகதி கள் பெரும் அல்லலுக்குள்ளா கியுள்ளனர். இவர்களுக்கு உறைவிடம்,உணவு அளிக்க இதுவரை யாரும் முன்வர வில்லை.

தோட்டத் தொழிலாளி ஒரு வர் தனது வீட்டுக்கு முன் னால் தற்காலிக குடிசையொ ன்றை அமைத்தமையைக் கா ரணம் காட்டி தோட்ட நிர் வாகம் பொலிஸில் செய்த முறைப்பாட்டினைத் தொடர் ந்து அத் தொழிலாளி கைது செய்யப்பட்டு விளக்க மறிய லில் வைக்கப்படடுள்ளார்.அத் துடன் அத் தொழிலாளியின் குடும்பத்தைச் சேர்ந்த அனை வருக்கும் தோட்ட நிர்வாகம் வேலை வழங்கவும் மறுத்து ள்ளது.

22.08.1991 ______________

பேருவளைப் பகுதியில் சிங் கள-முஸ்லீம் மக்களுக்கிடை யிலான மோதலில் பல கடை களும்,வீடுகளும் எரிக்கப்பட் டுள்ளன.ஒரு பெண் கொல்லப் பட்டுள்ளார்.400 பேர் அகதி களாகப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.பொலி ஸாருக்கெதிராக பொதுமக் களால் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

23.08.1991 ______________

பேருவளையில் மூவர் அரச படையினால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர். பீதி காரணமா கப் பலர் அகதி முகாம்களை நாடி முட்டை,முடிச்சுகளுடன் சென்றுகொண்டிருக்கின்றனர்.

போக்குவரத்துச் சேவையை மக்கள் மயமாக்கச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். உங்கள் மனைவிமாரையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மக்களை மயமாக்குங்கள். அர சாங்கத்தையும் மக்கள் மய மாக்குங்கள். பாராளுமன்றத் தையும் தனியார் மயமாக் குங்கள். சபாநாயகரின் ஆச னத்தில் ஒரு வெளிநாட்டவ ரைக் கொண்டு வாருங்கள். - சு.க. எம்.பி.

24.08.1991

யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதே சச் செஞ்சிலுவைச் சங்கத்து டன் புலிகள் இயக்கம் தொட ர்பு கொண்டிருப்பதாகவும், அதன்மூலம் அரசுடன் பேச்சு வார்த்தைக்கு முயற்சிகள் வர லாமென்றும், தொண்டமான் யாழ்ப்பாணம் வந்தால் அவரு டன் பேசத் தயாராயிருப்பதா கவும் அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார்.

நிவாரண உணவுப்பொருட்கள் வழங்கவேண்டும், பொருளா தாரத் தடைகளை நீக்கவேண் டும் எனக்கோரும் மு[illegible]
தேவில் 1 இலட்சத்துக்கு மேற்

பட்ட பொதுமக்கள் கலந்து கொண்ட ஊர்வலம் நடைபெற் றது. இதே கோரிக்கைகளுடன் யாழ்ப்பாணச் செயலகத்திற்கு முன்னால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மறியல் போரா ட்டத்தில் ஈடுபட்டனர்.

மலையகத்தில் பல இடங்க ளில் அரசபடைகளால் அப்பா வித் தோட்டப் பொதுமக்கள் தாக்கப்பட்டு, அவர்களுடைய உடைமைகளும் சூறையாடப் பட்டு வருகின்றன. தோட்டத் தொழிலாளர்கள் திடீர் திடீ ரெனக் காணாமற் போகின் றனர்.

25.08.1991

ஜூன் 1990 தொடக்கம் ஜூலை 1991வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 1,200 க்கு மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக யாழ் செயலக மதிப்பீடு தெரிவிக்கிறது.

27.08.1991

கடந்த மாதம் ஆரம்பமாகிய பலவேகய இராணுவ நடவடி க்கை காரணமாக வெற்றிலை க்கேணி, கட்டைக்காடுப் பகுதி களில் பாடசாலைகள், வீடுகள், அலுவலகங்கள் என்பன பீரங் கிப் படகுகள், விமானங்களின் குண்டுவீச்சினால் சேதமாக்க ப்பட்டுள்ளன. ஓடித்தப்ப முடி யாமல் சிக்கிக்கொண்ட பொதுமக்கள் இராணுவத்தின ரால் சுட்டுக்கொல்லப்பட்டுள் ளனர்.

30.08.1991

ஜனாதிபதி மீது அரசியல் குற்ற விசாரணை நடத்தக் கோரி சபாநாயகரிடம் கையளி க்கப்பட்டுள்ள மனுவில் 45க்கு மேற்பட்ட அரச எம்.பி.க்கள் உட்பட எதிர்க்கட்சியையும் சேர்ந்த சுமார் 120 எம்.பி. க்கள் கையெழுத்திட்டுள்ளனர்.





www.tamilarangam.net

www.tamilarangam.net




# விடிவெள்ளி தலைமறைவாகும்!

கிழக்குப் பக்க ஜன்னல் வழியாக அந்த மனிதன் கடலை வெறித்துப் பார்த்தபடி மௌனமாகவே இருந்தான். அன்று பௌர்ணமிநாள். முழு நிலா கடலில் இருந்து வெளியே வரும்வரை பார்த்துக்கொண்டிருந்தான். நிலவு கடலைவிட்டு வெளியே வந்தமையால் கடலலைகள் சற்று வேகமான அலைகளுடன் கூடியே கரையில் அடிப்பதும், திரும்பக் கடலில்போய் புதிய அலைகளுடன் சேர்ந்து கரைவந்து சேர்வதுமாக இருந்தன.

"சோறு சுடுகுது அம்மா..!" எனக் கூறி கோப்பையை நிலத்துடன் தேய்த்துக் கோபப்படும் பன்னிரண்டு வயதுக் கோபாலன் தோள் கனக்க ஆள் உயர ஆயுதத்துடன் முதல் தடவை வீட்டுக்கு வந்திருந்தான். அந்த மனிதனின் செல்லமகன் எப்போது இறந்தான் எனத் தெரியாத வினாவுக்கு விடை தேடி விசாரிக்கச் சென்றபோது.... அவன்

www.tamilarangam.net

கொலையுண்டான் என்ற குற்ற உண ர்வு சிறிதும் இன்றி....

"உன் மகன் துரோகி!"

"அவன் செய்த குற்றமென்ன?"

"அவன் கையில் ஆயுதம் வைத்திருந்தான்"

இன்று பேரன் கோபாலன் ஆயுதத்துடன்!

சற்றுத் தொலைவில் மீன்கள் துள்ளுவது அந்த மனிதனின் கண்க ளுக்குத் தென்பட்டது.பௌர்ணமி காலம் ஆனதால் வழமையைவிட கடல் இன்று வெள்ளமாக இருந் தது.மீன்கள் துள்ளுவதும்,துள்ளும் மீன்களைப் பிடிக்க வட்டமிடும் பெரு மீன்களின் அசைவுகளையும் அந்த மனிதன் கண்டுகொண்டான். சிறு மீன்கள் அங்கு எதிரிக்கு எதி ராக ஒன்று சேர்ந்து போராடாமல் தாம் தப்பவே முயற்சித்துக்கொண்டி ருந்தன....

போராட்டம் என்பதைக் அங்கு காணவில்லை!அந்த மனிதன் தூரத் துப் பார்வையைக் கரைகளுக்கு நக ர்த்தினான்.அங்கு மணல் நண்டுகள் தமது பொந்துகளில் இருந்து வெளி யே வந்து கொண்டிருந்தன.

கடல் வெள்ளம் அதிகரித்திருந் தமையினால் மணல் நண்டுகள் பொந்தில் எப்படி இருக்க முடியும்? மணலில் தோண்டப்பட்ட பொந்துக ளில் நீர் நிரம்பியதால் மணல் நண் டுகள் அலையின் நுரையோரங்க ளில் இரு கண்களையும் உயர்த்தி யபடி அலை கரையுடன் மோதவும் திரும்பி கடலினுள் சேரவும் அதற் குத் தகுந்தாற்போல் நடனம் ஆடின..

இந்த நிகழ்வுகளை அந்த மனி தன் அறுபது வருடமாக பார்த்தபடி தான் இருக்கிறான். ஆனால்... இன்று மட்டும் இந்த அசைவுகள் அந்த மனிதனுக்கு ஒரு உண்மையை உணர்த்தியது.

கண்களை மூடிக்கொண்டான். உடல் வியர்த்திருந்தது.உண்மை களை புறச்சூழல் இன்று மிகத் தெளிவாகவே உணர்த்தி இருந்தது. மூத்த மகனின் கணவன் இந்திய இராணுவத்தை எதிர்த்து வீழ்த்தப் பட்டபோது அவன் தேசிய எழுச்சி என்று பொறுத்துக்கொண்டான். மருமகனின் இழப்பு பாரியது. ஆனால் இன்றைய அதிகாரிகள் அன்று இழப்பின் வேதனைக ளைப் பகிர்ந்துகொள்ள வரவில்லை. தமது போராளி என்று விருது வாங்கி பெருமை பாராட்டினர்.

நினைவுகள் அவனை உள்ளூர வாட்டியது.கண்களை திறந்து கொண்ட அந்த மனிதன் சாய்வு நாற்காலியை விட்டு எழுந்துகொண் டான்.வேட்டித் தொங்கலை ஒரு

www.tamilarangam.net

கையினில் பிடித்தபடி கடற்கரை வாசற் பக்கம் வந்த அந்த மனித னைப் பூரணம் இடைமறித்து...

"எங்கை போறாய்..?"

"பிள்ளை காலாற கடக் கரைக்கு..."

"அது யன்னல் வழியா தெரியுது தானே?வீட்டுக்குள்ளயிருந்து பாக்க லாம்."வீட்டில் விளக்கு இல்லை. தம்பியின் இழவுக்கு இந்த ஊர் வரவேயில்லை...

"பிள்ளை நான் வெளியிலை கொஞ்சம் போயிட்டு வாறன். நாங்கள் இதுவரைக்கும் ஒருவருக் கும் கெடுதல் செய்ய இல்லை.இது கள்... இந்த சனங்கள்....."

நாலுமுழ வேட்டியுடன் கடற்கரையில் கால்பட சற்று ஜில் என இருந்தது.ஆனால் உள்ளம் கொதித்துக்கொண்டுதானிருந்தது. மணற் பரப்புக்கு வந்த அந்த மனிதன் தன் கால்களை மண்ணில் புதைத்துக்கொண்டான்.

'... இந்த மண்ணில்தானே அவனை அரையளவு கிடங்கு கிண் டித் தாட்டனான்.இந்த உப்பு மண் எதை எல்லாம் தீர்த்துவைத்தது...

அந்த மனிதன் மல்லாக்க மண ற்பரப்பில் சார்ந்துகொண்டான். வானத்தில் வெள்ளிகள் நிறையவே காணப்பட்டது.ஆனால் வெள்ளிக வில் என்றும் இல்லாத பிரகாச த்தை இன்று கண்டுகொண்டான். உண்மைகளுக்காக அங்கொன்று இங்கொன்றாக வெள்ளிகள் பிரகா சிப்பதால் நிலவுக்கு இன்று மட்டும் ஆட்சி கிடைக்கின்றது.நிலவு நிலை யற்றது.அதில் தினம் தினம் மாற் றம் உண்டு.அந்த மாற்றம் புறச்சூழ லில் மாற்றங்களை உண்டுபண்ணி யது என்பது மறுக்கமுடியாது. ஆனால்.... அந்த மனிதன் நம்புவது வாடை வெள்ளியைத்தான்.அவன் இயல்பாகவே வாடை வெள்ளியின் துல்லிய ஒளியை ஒருகணம் நினைத் தவனாக...

வாடை வெள்ளி!.இதுவே சர்வ தேசக் கடலோடிகளின் உயிர்நாடி. இதனை அடிப்படையாகக்கொண்டு தான் அந்த மனிதனும் இயற் கையை எதிர்கொண்டான்.கடல் அலையைக் காத்திருந்து முகங்கொ டுத்தான்.தன் குடும்பத்தைக் காக்க கடலளவு ஆசைகளை கடலின் மனம் கொண்டு காத்து நின்றான். இயற்கையுடன் போராடினான்....

இப்படிக் கட்டிக் காத்து அவன் வளர்த்த குடும்பம் இன்று செல் விழுந்த பனைமரமாய்... கண் ணிவெடிகள் கண்ட நடைபாதையாய்....

அன்று மனைவி பாங்கறில் பாம்பு கடித்து இறந்தபோது விடிவு

www.tamilarangam.net

க்காக மக்கள் இழப்புகளைத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

மருமகனை ' இந்தியப் புயலில்' தொலைத்தபோது... தேசிய எழுச்சியில் இந்த இழப்பும் ஏற்கப்படத்தானே வேண்டும் என்று பொறுத்துக்கொண்டான்.

அவன் மகன் இயக்கம் மறுக்கப்பட்ட இயக்கத்தில் இருந்தமையால் சொந்த ஊருக்கு வர அனுமதி மறுக்கப்பட்டு, பிறகு 'காணாமலே' போய்விட்டான். இப்போது மகன் எங்கே..?எங்கே...?

பெரிய கிடங்கொன்றில் பல பிணங்களுடன் ஒன்றாகத் தாக்கப்பட்டானா?

ரயர்கள் போட்டு பல பிணங்களுடன் ஒன்றாக கொளுத்தப்பட்டானா??

கைகளையும்,கால்களையும் கடற்கரை மணலில் ஒருதரம் அமிழ்த்தியபடி நீண்டநேரம் அசைவின்றி மல்லாக்காக் கிடந்த அந்த மனிதனின் கண்கள் இருபுறமும் கண்ணீர் வழிந்தோடி காது மடல்களை நிரப்பி மணலில் சொட்டுப் போட்டுக் கொண்டது.

அந்த மனிதன் திடீரென எழுந்து வாடை வெள்ளியை மட்டும் முறைத்துப் பார்த்துக்கொண்டான். எத்தனை தடவை தான் கரை தெரியாது கடலில் தவித்தபோது துணை நின்ற விடிவெள்ளி.இதை ஒதுக்கிவிட்டு புதிர்ப்பாதையில் போபவர்கள் கரை சேர்வார்களா?அவன் ஆயுத ஆயுதம் ஒன்றைத் தோள் கனக்கக் காவி வந்த தனது

## நகைச்சுவை!



*எல்லாளன் மீண்டும் பிறந்தானடி-அவன் வல்வெட்டித்துறையில் வளர்ந்தானடி.*
*(முன்ஸ்ரர் நகரில் புலிகளால் நடாத்தப்பட்ட மாவீரர் தினத்தில் இடம் பெற்ற ஒரு நாட்டிய நாடகத்திலிருந்து..)*

www.tamilarangam.net

பேரனை ஒருதரம் நினைத்துக் கொண்டான்.

"சோறு சுடுகுது அம்மா..." எனக் கோபங்கொள்ளும் கோபாலன் ஆஞ்சயர ஆயுதம் வைத்திருக் கிறான்.இவன் எப்போது துரோகி ஆகப் போகிறான்?அப்போது பேரனைப் பற்றி தகவல் அறிய முடியுமா?அந்த மனிதன் கலங்கினான். உன் பேரனும் ஆஞ்சயரத் துப்பாக்கி வைத்திருந்தான் என்பதால் அவனும் துரோகியே என்று பட்டம் சூட்ட எத்தனை நாட்கள் செல்லும்?

அந்தமனிதன் தலை கனக்க கடகத்தில் சோறு சுமந்தவன்.தன் செல்ல மகன் கொலை செய்யப்பட் டபின் துரோகி என்ற வதந்தியில் ஊரவரை சிக்கவைத்து அந்த ஊரின் வாயால் அந்த மனிதனின் காதுகளுக்கு இழவுச் சேதி வருவது எத்தகைய பாரிய வேதனை.. எத்தகைய பாரிய குள்ள நரித்தனம்...இது எத்தகைய பாரிய துரோகத்தனம்... வஞ்சகத்தனம்...

எத்தனை போராளிகள் தம் உயிர்களை எத்தனையோ நம்பிக்கையில் அர்ப்பணித்தனர்.அவர்களின் அர்ப்பணிப்பு தமிழ் மக்களின் விடுதலைக்காகவா??பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரானதா?? அல்லது சைவத் தமிழ்த் தேசியத் தலைமைக்காகவா??

அந்த மனிதனின் வாழ்க்கையின் அனுபவமானது இன்று பல இழப்புகளினூாடு தொகுக்கப்படுகின்றது.கச்சான் காற்று அடிப்பதற்கு வட மேற்கு மூலையில் மேகங்கள் கருக்கட்டுகின்றன.

"அப்பு கச்சான் காத்து அடிக்கப்போகுது.வாவன்.."

"ஓம் பிள்ளை.வாறன்"

அந்த மனிதன் இப்போது எழுந்து நடக்கின்றான்.அவன் மனம் இயக்கங்களை பற்றியே இப்போது எண்ணவில்லை. தன்னுடைய மகனுக்கு நடந்ததுபோல் எத்தனை உண்மையான சமூக அரசியல் வேலை செய்தவர்கள் அக் கிராமத்தை விட்டு விரட்டப்பட்டனர்...உண்மையாக உழைத்த எத்தனை போராளிகள் கொல்லப்பட்டனர்...

துரோகிகள் பட்டியல் என்று அன்று காட்டியபோது தலையாட்டிய இந்தச் சனங்கள் இப்போது மாங்குளம் தாக்குதலின் பின் காட்டப்பட்ட பட்டியலை மட்டும் ஏன் தயக்கத்துடன் ஏற்றார்கள்..?!

தன் மகன் ஆயதம் வைத்திருந்தான்,அதனால்தான் அவன் அழிக்கப்பட்டான் எனச் சொல்லும் அளவுக்கு இவர்களது வரையறைகள்

www.tamilarangam.net

நாறிக்கொண்டிருக்கின்றன. ஆனால் கொல்லப்பட்டவனின் உணர்வுகள்.. எண்ணங்கள்... சொன்னால்கூட இவர்களுக்கு விளங்கிக்கொள்ளும் பக்குவம் இருக்குமா?

இல்லை!

இல்லை!!

"என்னணை அப்பு உனக்கு" எனப் பூரணம் பதறியபடி கேட்டாள்.

"இல்லைப் பிள்ளை.எனக்கு யோசினை கூடிப்போச்சு..."எனக் கூறியபடி வீட்டுக்குள் நுழைந்தான்.

தமிழ்மக்களின் ஜனநாயகம் பறிக்கப்படுகிறது என ஜனநாயகம் தேடி அவன் மகன் புறப்பட்டான் என்பதையும், இக்கட்டான காலத்தில் தனது மக்களுக்காகவே மரணித்தான் என்பதையும் அந்த மனிதன் நினைவுகூருவதை யார்தான் தடைசெய்ய முடியம்.செங்கதிர்கள் இன்று தலையெடுக்கவிடாமல் கிள்ளி எறியப்படுகின்றன. இது புதிய சைவத் தமிழ் தேசிய முதலாளித்துவத்தின் தலை எடு போர்!... யோசனையுடனே அந்த மனிதன் சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

வட மேற்கு மூலையில் மப்புக் கட்டிய மேகம் மிகவும் வேகமாக கிழக்குப் பக்கமாக வந்து சந்திரனையும் மறைத்து பலமான கச்சான் காத்துடன் கூடிய மழையும், இடியும்,மின்னல்களுமாயின. நடுச் சாமத்திற்கும் கொஞ்சம் முன்னதாகவே மழை சற்று இளகியது.

நாலு பேர் வீட்டுக்கு வந்தனர்.

"யார் பூரணம் இங்கே?"

"நான்தான் தம்பிமாரே" என்றாள் பூரணம்.

"அது அக்கா உங்கடை மகன் பங்கர் வெட்டேக்கை விழுந்து காலிலை காயம்.. அதுதான்..."

"ஐயோ தம்பிமாரே.. என்ரை புருசனும் உங்களுக்காய்தானே... இந்தியன் இழவு விழுவான்... என்ரை செல்லத்துக்கும் ஏதுமெண்டால் என்னாலை எப்பிடி தம்பிமாரே..."

"அதுதான்... உங்கடை அவருக்காகத்தான்..."என்று ஒருவன் சொல்லிக் கொண்டிருக்கும்போது மற்றவன் அவன் காலில் மிதித்துத் தடுத்துவிட்டு,"இல்லை அக்கா.. வீட்டிலை வைத்துப் பார்ப்பதுதான் நல்லதென உங்கடை அவற்றை மச்சான்தான் சொல்லி கொண்டு வந்தனாங்கள்"

"ஐயோ தம்பிமாரே..."என்று

www.tamilarangam.net

கத்தியபடி பூரணம் ஓடிப்போய் ஜீப்பில் கொண்டுவரப்பட்ட கோபாலனைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குள் வந்தாள்.முதல்நாள் அவன் ஆயுதத்துடன் வீட்டுக்குச் சாப்பிட வந்தபோது தான் நடந்துகொண்ட முறையினால்தான் அவனுக்கு இப்படி நேர்ந்ததோ என அவள் தன்னையே நொந்துகொண்டாள்.

கொண்டுவந்த நால்வரும் போனபின் கோபாலன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுப் பேசினான்.

"அம்மா நீ சொன்னது சரிதான்"

"என்னடா நடந்தது?"

சாய்வு நாற்காலியில் சிறிது அசைவு தென்பட்டது.அந்த மனிதன் தூங்கவில்லை.

" இப்ப கொஞ்ச நாளாய் என்னைப் பாக்கிறவங்கள் சரியா மாமன் மாதிரித்தான் என்ரை சிரிப்பு,நடை,பதில் சொல்லுறது இருக்கென்கிறாங்கள்.முந்தநாளும் ஒருதன் இப்பிடிச் சொல்ல,அது தான் எல்லாம் முடிஞ்சுதே எண்டு பதில் சொல்லிப்போட்டேன்.அவன் திடுக்கிட்டு எங்கடை காம்புக்குப் பொறுப்பான சித்தப்பாவைக் கூப்பிட்டு ஏதோ சொன்னான்.அதற்குப் பிறகு காம்பில் எல்லோரும் என்னோடு கதைப்பது குறைந்துவிட்டது. நேற்று பங்கர் வெட்ட எண்டு ஓடித் திரிந்தார்கள்.புத்தகம் படித்துக்கொண்டிருந்த என்னைக் கூப்பிட்டு வெட்டச் சொன்னாங்கள்.வெட்டப் போனேன்.திடீரெண்டு யாரோ இருட்டுக்கை இருந்து பிக்கானாலை எறிஞ்சாங்கள். நல்ல காலம் அது காலிலை விழுந்து நல்லா வெட்டிப்போட்டுது. தலையிலை விழுந்திருந்தால் நான் முடிஞ்சன்.தியாகிகள் பட்டியல்தான்..."

"என்னடா சொல்லுறாய்...?" என்றபடி அந்த மனிதன் சாய்வு நாற்காலியைவிட்டு எழுந்துகொண்டான்.அவனின் மனதிலிருந்த கேள்விகள் எல்லாம் முதற்தடவையாக வெளியே வந்தன.

"இதுவரைக்கும் நாங்கள் பட்ட கஷ்டாங்கள் ஒரு விடிவுக்கு எண்டு தான் இருந்தோம்.இப்ப வீட்டிலை விளக்கு கொளுத்திக் கதைச்சால் ஒரு பத்து பாசல் சாப்பாடு தேவையெண்டு ஆணை வருகுது.ஆகாயத்திலை இருந்து அரசு அரிசி போடேலை குண்டுதான் போடுது எண்டு சொன்னா கேக்கவா போறாங்கள்?வெளியிலை எல்லாம் முடிஞ்சு இப்ப கூட இருக்கிற போராளியளைக் கூட கனையெடுக்கிற அளவுக்கு தன்னம்பிக்கையீனம். இந்த உள் இயக்க கொலையள் இப்ப வெளியிலை வருகுது..."

"தாத்தா நீ கனக்க கதைக்

www.tamilarangam.net

காதை.இப்ப என்னைப் போல பெடியன் துரோகிகள் கிடையாமல் அலையுறாங்கள்.உனக்கு என்ன தெரியும்.. உண்மையைக் கதைக் காதை,பாக்காதை,கேக்காதை.சாப்பிட மட்டும் வாயைத் திறக்கிறது தான் நல்லது"என்றான் கோபாலன்.

அந்த மனிதன் இந்தப் பதிலைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை."கோபாலா என்னடா சொல்லுறாய்?"

"எவன் சிவப்பு பேசினானோ அவன் செத்துப்போனான்.இப்ப பேசிறவன் சாகப் போறான் எண்டு புதுப் புதுக் கருத்துகளை கதைக்கிறாங்கள் தாத்தா.என்ரை மாமாவுக்கும் இதாலதான் அது நடந்திருக்க வேணும்.தாத்தா.. என்னைப் பொறுத்தவரை மாமா சாகேலை.உயிரோடைதான் இருக்கிறார்..."

அந்த மனிதன் முதற் தடவையாக தனது பரம்பரையானது உயிருடன் வாடைவெள்ளியின் தாக்கத்தையும்,தன்மையையும் கண்டிப்பாகக் கண்டுகொள்ளும் என்ற நம்பிக்கையில் உறுதியானான்.கோபாலனைத் தன்னுடன் அணைத்துக் கொண்டான்.

"தாத்தா... மாதகலாலை இந்தியா போகட்டாம்.."

"ஆர் சொன்னது?"

"எங்கடை சித்தப்பாதான். அவர்தான் எங்கடை காம்ப் பொறுப்பாளர்"

"அவனே சொன்னவன்.அவனையும் எத்தனைநாள் இவங்கள் விட்டு வைப்பாங்களோ... அவனும் நல்ல பெடியன்தான். நல்லவங்களுக்கு

## நகைச்சுவை!



*அரசுடன் சேர்ந்து போராடும் நாம் தனிநாடு பிரிவதை விரும்பவில்லை என்பதால் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மீட்பதிலும் எமக்கு அக்கறையில்லை என்பது அர்த்தமல்ல.*

*(பத்திரிகையாளர் மகாநாட்டில் டக்ளஸ் தேவானந்தா)*

www.tamilarangam.net

இப்ப காலம் இல்லையே..."அந்த மனிதன் பெருமூச்சு விட்டான்.

* * * * * * *

அதிகாலை அந்த மனிதனின் வீட்டு பங்கர் இடிந்து மழைநீர் நிரம்பியிருந்தது. ஆடு,மாடுகள் தனியாக அலைந்துகொண்டிருந்தன.

அந்த மனிதன்,பூரணம், கோபாலன் மூவரும் மாதகல் கரை மறைவதைப் படகிலிருந்து கண் வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

புதிய இடம்... எப்படிச் சாமாளிப்பது?என்ன உழைப்பு?என்ற வினாக்கள் பூரணத்தின் மனதிலும் அந்த மனிதனின் மனதிலும் மாறி மாறி வந்துகொண்டிருந்தன.

கோபாலன் மட்டும்,நிச்சயமாகத் தான் சொந்த மண்ணில் திரும்பவும் கால் வைப்பதாக முடிவெடுத்துவிட்டான்.

* சாந்தன் *

---

*மகத்தான பிழைகள் !!!*

*கலம் 43இல் 59ஆம் பக்கத்தில் யூலை மாதம் என்பதற்குப் பதிலாக யூன் மாதம் என்றிருக்கிறது!*


*"இங்கும் ஊர் விளையாட்டு"என்ற கட்டுரையில் 56ஆம் பக்கத்தில் "...இதற்குப்போய் ஏன் குழம்புவானென்று எண்ணி பலர் வரவில்லை ..என்று வரவேண்டியதில் "பலர்" வரவில்லை!!*

*பிழைகளுக்கு வருந்துகிறோம்.*

*- கடலோடிகள்*



# நூல் அறிமுகம்




Frauentreffen
I.Z.3.W
Overwegstr. 31
4690 Herne 1
Germany



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்நிய தேசத்தில்
வீசப்படும்
அபரிமிதமான
கசக்கின்ற
பாண் துண்டுகளில்
வாழ மறுத்தாய்.

உன்னைத் தொடர்ந்த
மரணத்தின்
உஷ்ண மூச்சுடன்
வாழ்வதற்கென்று
தாய்மண் மீண்டாய்.

மணமகளே....

உன்னுடைய
தலை நிமிர்ந்தே நின்றது.
அவர்கள்
உன்னைத்
தெருவில் ஒரு நாயைச் சுடுவதைப் போல
சுட்டார்கள்.

ஆனால் உன் சாவு
அவர்களின் அவலட்சண
வெட்க சொரூபத்தின் வெளிப்பாடாய்...
ஆனால் -
உனது அற்புதமான காம்பீரியமாய்
என்றும் நினைவில் வாழும்.

நான் அஞ்சலி செய்ய
மலர்வளையம் கொண்டு வரவில்லை.
மணப்பெண்ணை வாழ்த்த
மலர்கள் தூவுகிறேன்.

ரெஜி சிறிவர்த்தனா/தமிழில்:மு.நித்தியானந்தன்

21.09.1989இல் புலிகளால் கொல்லப்பட்ட ராஜனி திராணகமவின் நினைவால் எழுதப்பட்டு மேர்ஜ்வெளியீட்டில் பிரசுரமானது.

www.tamilarangam.net

# வாசகர் கடிதம்

( 8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தும் புரிந்துகொள்ளாதவர்களால் தான் இவர்களின் உணர்வைக் கேலி செய்து,கை தட்டி விசிலடிக்க முடியும். தம்மைப் பணயம் வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது ஒன்றும் எம்.ஜி.ஆர் படம் அல்ல!

இந்திரா காந்தி கொல்லப்பட்ட போது சீக்கியரின் தலையைச் சீவித்தள்ளியதிற்குத் தலைமை வகித்தவனும்,போபால் பரம்பரையைப் பொசுக்கி அவர்களுக்கான நஷ்ட ஈட்டையும் அமுக்கியவனும்,தாய், மகள்,பேத்தி என்று எராளமான பெண்களை அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையில் வைத்துப் பாலியல் பலாத்காரம் செய்தவனும்,தமிழ்,முஸ்லீம் மக்களைக் கொன்று ஈழத்தைச் சுடுகாடாக்கியவனுமான ராஜீவ் கொல்லப்பட்டதும்தான் நாடே கலங்குதென்றும்,மனித நேயம் செத்துவிட்டதென்றும், கண்டிக்கப்படவேண்டிய கொலையென்றும் இக் கொலைஞனின் கூட்டாளிகள் பதறியடிப்பார்கள் என்றால் இப்படியானவர்கள் செத்துக்காட்டட்டும் சாவு எப்படியானதென்று.

ராஜீவ்,ரஞ்சன் போன்ற கொலைஞர்கள் கொல்லப்பட்டால் தான் மற்றவர்களுக்கு மனிதாபிமானத்தைப் பற்றித் தெரியும் என்றால் ,மரணத்தைக் கண்டு கண்ணீர் உகுக்க முடியும் என்றால்,கொலை ஒரு தீர்வல்ல தனிநபர் பயங்கரவாதமே என்று கண்டிக்க முடியுமென்றால் இப்படியானவர்கள் சாவதில் நியாயமுமில்லாமலில்லை.

பிரச்சினைகளுக்குத் தீர்வு தனிமனித கொலைகள் அல்லவெனினும் வன்முறைகளினதும், பயங்கரவாதத்தின்தும் ஊற்றுமூலமாய் அரசு இருக்கையில் இவை திருப்பி எய்தவர்களையே தாக்குவது இயங்கியல்.

பாம்பைக் கொல்ல வேண்டும் என்று யாரும் வெறிபிடித்து அலைவதில்லை.ஆனால் கொத்தவரும் பாம்புக்கு கற்பூரம் கொளுத்தி விழுந்து கும்பிடுவதா,தடியெடுத்து அடிப்பதா பகுத்தறிவு என்பது கேள்விக்குரியதல்ல.

இந்தியப் பொலிஸாரால் ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கைது செய்யப்பட்டிருப்பவர்களினதும்,ராஜீவின் அரசியலால் தாங்கள் வாழ்வை இழந்தவர்களினதும் "விசாரிக்கப்படாத வாக்குமூலங்கள்" வெளிவந்தால் தான்,இவற்றுக்கு "வெளியே" இருப்பவர்களுக்கு தாம் கருதும் மனித நேயம் பற்றிப் புரியும் போலும்.

புதிய ஜனநாயகத்தை கொப்பி பண்ணி எழுதியிருக்கிறோம் என்ற

www.tamilarangam.net

கருத்துக்கு தூண்டில் வெளிவந்த திகதியையும், புதிய ஜனனாயகம் எமது கைக்குக் கிடைத்த திகதியையும் விபரித்து நிரூபிப்பது அவசியமற்றது. தவிர, புதிய ஜனனாயகம் ஆசிரியர் குழுவினர் தாம் இது குறித்து எழுத யோசித்தவுடனேயே எமக்கு FaXஇல் அனுப்பி வைத்திருக்கக்கூடும் என்றும் வாதம் செய்யலாம்!

பாசிச ராஜீவின் அனைத்து வகையான ஒடுக்குமுறைகளுக்கும் நேரடியாக முகம் கொடுத்து, மக்களோடு நின்று, தம்மாலியன்றவரை போராடிவரும் அமைப்புகளில் ஒன்றான புதிய ஜனனாயகம் எழுதிய ராஜீவ் கொலை பற்றிய கட்டுரையும், "உரிய" தளத்திலில்லாத நாம் எழுதிய கட்டுரையும் சாராம்சத்தில் ஒன்றே என்பதைக் "கண்டுபிடிக்க" முடிந்ததென்றால் ஏன் இவை ஒன்றுபடுகின்றன என்பதையும் கண்டுகொண்டிருந்திருக்கலாம்.

மனிதம் நிலை நிறுத்தப்படுவதற்கு இதற்கு எதிரானவர்கள் இல்லாமற் போவது தவிர்க்க முடியாததாகிறது. புறாவையும், கழுகையும் ஒரு கூண்டுக்குள் அடைத்துவிட்டு மனிதாபிமானம் பற்றி விரிவுரையாற்றுவது புறாவைக் காப்பாற்ற உதவாது. மனிதாபிமானத்திற்கும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஆயுதம் தேவைப்படுவதே இன்றைய நிலைமை.

– கடலோடிகள்

---

பின்னட்டை அறிவித்தல்...
கலம் 31இல் பிரசுரமான "தேசத்தின் குறிப்புகள்"இல் பிரஜைகள்.

---

## நகைச்சுவை!



நாம் வழிநடத்தும் புதிய சித்தாந்தம் இந் நாட்டு மக்களின் வாழ்வில் உண்மையான மறுமலர்ச்சியை ஏற்படுத்துகின்றது. வாழ்க்கைப் பாதையில் அடித்தளத்தில் தள்ளப்பட்ட நிலையில் சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வில் ஒரு அடிப்படை மாற்றம் ஏற்பட்டு சகலரும் ஏழ்மை நிலையிலிருந்து விடுபட்டு வாழும் ஒரு சகாப்தத்தையே நாம் உருவாக்கி இருக்கிறோம்.
(ஐ.தே.க. பொதுக்கூட்டத்தில் பிரேமதாச)

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீண்டும்... மீண்டும்...
கனவாய்... பழங்கதையாய்...
பட்டியில் மாடாய் மீண்டும் நாங்கள்.

பருவந் தவறாமல்
பறுவத்தில் கத்திளால் மட்டுமே
அவன் "அதுக்கும்" விடுவான்.

புல்லை மட்டுமே எமக்குக் காட்டுவான்.
எல்லாப் பாலையும் அவனே கறப்பான்.
எங்கள் கன்றுகள் வெறும் முலை சப்பும்!!!

எம்மவர் பலரிடம் கேள் இதைப்பற்றி
சொல்லுவர் பிறவிப் பயனை முழுதாய் அடைந்ததாய்.

பாலைக் குடித்த அவனின் பிள்ளைகள்
பள்ளியில் மீண்டும் முப்பாட்டன் படித்ததை
காது கிழிய அழுத்திப் படிக்கும்.

"பசு ஒரு சாதுவான பிராணி.
பசுவுக்கு நாலு கால்கள் உண்டு.
பசு கன்று போடும், சாணமும் போடும்.
பசு பால் தரும்"(?!)

இது காப்பியமாகத் தொடர்ந்து வளரும்!
தமிழ்க்கொடி பறந்து வானை அளையும்.

அளைஞ்சிட்டுப் போ!

*

இரா.ரஜீன்குமார்

## தமிழுணர்வு !

www.tamilarangam.net

# தேசத்தின் குறிப்புகள்

*(இரண்டாம் பகுதி)*

"நீ போனதடவையும் சொன்னாய்.இப்பவும் சொல்லுறாய்.பேச்சுவார்த்தை நடக்கப் போகுது நடக்கப் போகுதெண்டு.எதைப் பற்றித்தான் அவர்கள் பேசப் போகிறார்களோ?"என்று கேட்டேன் நான்.

"அது பற்றி யாருக்குக் கவலை? புலிகளுக்கோ, அரசுக்கோ.ஏன் மக்களுக்குக்கூட அது பற்றிக் கவலை இருக்கிறதாக எனக்குப் படவில்லை.ஒருவகையில் அது முக்கியமானதும் அல்லத்தானே?"

"எது....?"

" பேச்சுவார்த்தையின்போது எதைப் பேசப்போகிறார்கள் என்பது"

"ஏன் அப்பிடிச் சொல்கிறாய்?" என்று வியப்புடன் கேட்டேன் நான்.

"ஏனென்றால் எதைப் பேசுவது என்பது பற்றி அரசுக்கு ஒரு முடிவும் இருப்பதாகத் தெரியவில்லை. புலிகளுக்கும் அதுதான்.அரசுக்கு எதையும் விட்டுக் கொடுப்பது இயலாது என்ற நிலைப்பாடு.புலிகளுக்கு ஏன் போராடுகிறோம் என்பதையே தெளிவாகச் சொல்லும் அவசியம் இல்லை என்ற நிலைப்பாடு. ஆக நிலைமை எப்படி இருக்கும்? மக்களுக்கு இவர்கள் பேசுவதை தமக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற உணர்வு இல்லை.எல்லோரும் எதிர்பார்ப்பது பேச்சுவார்த்தையால் வரும் பயனையல்ல! மாறாக அதன் பக்க விளைவாக வரும் தற்காலிக சமாதான நிலையை,யுத்த நிறுத்தத்தையே... யுத்த நிறுத்தம்,சமாதான நிலை - அது தற்காலிகமாயினும் கூட - எல்லோருக்கும் அவசியமாயுள்ளது. மக்களுக்கு தாம் பட்ட புண்ணைக் கொஞ்சம் ஆற்றிக்கொள்ள... அரசுக்குத் தன்னைத் தயார்ப்படுத்த... புலிகளுக்கும் அதுவே... மற்றக் கட்சிகளுக்குத் தம்மை ஸ்திரப்படுத்த... என்று அது எல்லோருக்கும் தேவைப்படுகிறது.மற்றப்படி அது ஏதாவது தீர்வைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கை யாருக்கும் கிடையாது..."

"ஆனால் யுத்த நிறுத்தமும் அதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தையும் நடக்கப்போகுது.குறைந்த பட்சம் ஒரு பெடரல் - சமஷ்டி - முறைக்கு அரசு தயாரென அறிவிக்கலாம் என்று பேசப்படுகிறதே.. ஏன் நீ கூட அப்படிச் சொன்னாய் தானே?"

"உண்மையில் ஒரு பெடரல் ஆட்சிமுறைக்குப் புலிகள் தயாராகலாம் என்பது எனது அபிப்பிராயமாக இருந்தது.அப்படி புலிகளின் சார்பில் வந்த பேச்சாளர்கள் தற்காலிகமாகவேனும் அதை ஏற்றுக்

www.tamilarangam.net

கொள்ளத் தயார் என்று தெரிவித் திருந்தார்கள்.அரசுக்குள்ளும் அப் படி ஒரு கருத்துப் போக்கைக் கொண்ட பகுதி இருக்கிறது.பிரே மதாசவை ஆதரிக்கிற புத்திசீவி கள் - குறிப்பாக டயன் ஜயதிலக - போன்றவர்களிடமும் அத்தகைய கருத்து நிலவுகிறது.ஆனால் அர சின் தன்மை அதற்குரியதாகத் தெரியவில்லை.அது இன்னமும் ஒற் றையாட்சியின் அவசியம் பற்றி வலி யுறுத்தவும்,மற்றவற்றைப் பயங்கர வாதம் என முத்திரை குத்தி அழிக் கவுமே முயல்கிறது.அதோடு புலி களை அது தவிர்க்க முடியாமை காரணமாக பேசுவதற்குரிய ஒரு சக்தியாகக் கருதுகிற போதும்,புலி களைத் தொடர்ந்து வைத்திருக்க அது இஷ்டப்படவில்லை.ஆனால் இவையெல்லாவற்றையும் விட முக் கியமான ஒன்று இருக்கிறது..."

"என்ன அது..?"

"பண்டா-செல்வா ஒப்பந்தத் தின்படி வழங்கப்பட்ட அல்லது அத ற்கிணையான அதிகாரங்களை வழ ங்குவது என்ற நிலைக்கு அரசு வந்து அதற்கு <<சமஷ்டி>>என்று பெயர் சூட்டினாலும் - சமஷ்டி என் பது சுயாட்சி அல்ல - அது பிரச்சி னையைத் தீர்க்குமா என்பதுதான்" என்ற நண்பர் மேலும் தொடர்ந்தார்.

"இது பற்றி நாம் முன்பும் கதைத்திருக்கிறோம்.சமஷ்டி ஆட்சி யின் அதிகாரங்கள் இலங்கையர சின் பேரினவாதக் கொள்கைக்கு உட்பட்டதாக இருக்கும்வரை அதற் கு எந்த அர்த்தமும் இராது.குடியே ற்றம் மிகப் பெரிய பிரச்சினையாக அமையும்.சுவிற்சலாந்து உதாரணம் பலராலும் இங்கு முன்வைக்கப்படு கிறது-அரசு தரப்பு எம்.பி.க்கள், மந்திரிகளாலும் கூட. ஆனால் அது வும் எவ்வளவுக்கு நடைமுறையிலு ள்ள பரஸ்பர சந்தேகப் பிரச்சி னையை தீர்க்கும் என்பது இன்ன மும் கேள்விக்குறியே.இலங்கையரசு இற்றைவரையும் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமென்றோ,அவர்க ளுக்கும் சுயநிர்ணய உரிமை உண் டென்றோ பேச்சளவில் கூட ஒப்புக் கொள்ளவில்லை.இந்திய- இலங்கை ஒப்பந்தம் சாதித்ததெல்லாம் <<தமிழும் உத்தியோக மொழி>> என்பதும்(சிங்களம் மட்டும் சட்டம் இன்னும் நீக்கப்படவில்லை!)தமிழர் கள் நீண்டகாலமாக இலங்கையில் வசித்து வருகிறார்கள் என்பதுமே!! ஆனால் அது கூட வல்லிபுரப் பொற்சாசனம் போன்றவற்றால் பொய்யெனக் காட்ட முயற்சிகள் நட க்கின்றன.இவ்வளவு பிரச்சினைக ளுக்குப் பிறகும் குடியேற்றம் தொட ர்கிறது.ஆக,சமஷ்டி, தமிழீழம் என்ற பெயர்களைப் பொறுத்தல்ல பிரச்சினை தீர்க்கப்படுவது.அது முழுமையான அடிப்படை மாற்றத் தில் தங்கியுள்ளது.அதாவது இந்த அரசின் போக்கே மறுவார்ப்பு செய்யப்படவேண்டியுள்ளது!"

www.tamilarangam.net

"ஆக உன்ரை அபிப்பிராயத்திலை பேச்சுவார்த்தை எந்த மாறுதலையும் தராது என்றால் என்னதான் முடிவு..?"

"முடிவு... என்ன என்பது வெளிப்படையானது.இலங்கை அரசின் ஒற்றையாட்சி அமைப்பு முறைக்குள் இதற்குத் தீர்வு இல்லை.கூட்டுமுறை ஆட்சி அல்லது சுயாட்சி அமைப்பு வழங்கும் முறைகளால் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு இறங்கி வருமானால் அப்படி ஏதாவது சாத்தியம்.ஆனால் அப்படி இறங்கிவர அரசு தான் ஏறி நிற்கும் இன்றைய அத்திவாரத்தை உடைத்துப் புதிய அத்திவாரத்தைப் போட்டாக வேண்டும்.அது நடக்காதவரை ஒரேவழி தமிழ் மக்கள் தொடர்ந்து போராடுவதுதான்...."

"என்ன போராட்டத்தை நீ சொல்கிறாய்?"

"விடுதலைப் போராட்டந்தான். தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதற்கான போராட்டம்தான்..."

"அதுதான் எப்பவோ முடிந்த கதையாகிவிட்டதே?இப்போது 80 களில் போராட்டத்தில் குதித்த பலர் தமிழீழத்தை மறந்துவிட்டார்கள்.இன்னும் சிலர் பழக்கதோஷத்தில் அதை உச்சரித்துக்கொண்டிருக்கிறார்கள்.மக்களுக்கு அது என்ன என்பதே தெரியவில்லை.தமிழீழம் இல்லை என்று அவர்கள் அழவில்லை.அவர்கள் அழுவதெல்லாம் நிம்மதி,சனநாயகம், சுதந்திரம் என்பவற்றுக்காகத்தான். அது <<தமிழீழம்>>என்ற பெயர்ப்பலகையில்தான் இருக்குதென்று நீ நினைக்கிறாயா?"

## நகைச்சுவை!

*அடுத்த 10 ஆண்டு காலத்திற்கான விசேட கல்வித் திட்டத்தை கல்வியமைச்சருடன் இணைந்து தயாரித்து வருகிறேன்.இத்திட்டத்தின் மூலம் 21ஆம் நூற்றாண்டில் மலையகத்தில் கல்வியில் மாபெரும் மறுமலர்ச்சி ஏற்படும்.*

*(கட்டிடத் திறப்பு விழாவில் தொண்டமான்)*



www.tamilarangam.net

"நான் சொன்னது அதில்லை. அவர்கள் விரும்புகிற நிம்மதி, சனனாயகம்,சுதந்திரம் எல்லாம் சுதந்திர அரசை ஸ்தாபிப்பதுடன் பிணைக்கப்பட்டுள்ளது என்றே நான் சொன்னேன். இற்றைவரைக்கும் தமிழீழம் தவிர்ந்த வேறு தீர்வு பிரச்சினைக்குத் தீர்வாகும் என என்னால் கருதமுடியவில்லை"

"தமிழீழம் பிரச்சினைக்குத் தீர்வு என்று எப்படிச் சொல்லுவாய்?அங்கே மட்டுமாவது நிம்மதி கிடைக்கப் போகிறது என்பதற்கு ஏதாவது உத்தரவாதம் இருக்கிறதா?"எனக்குப் பச்சை மட்டை அடியும்,படுகொலைத் தண்டனைகளும் ஞாபகத்திற்கு வந்தன.சித்திரவதை முகாம்களின் நிர்வாக பீடமாக தமிழீழ அரசு இருக்குமோ என்ற எண்ணமும் தோன்றியது. மாற்றுக் கருத்துடையவர்கள்,சிந்தித்தவர்கள் என்பதால் 1,500 பேருக்கு மேல் இன்றும் வதை முகாம்களில்.

நண்பர் யோசனையுடன் தலையாட்டினார்."அதுதான் பிரச்சினை. தமிழீழம் தேவை என்பது ஒரு விடயம்.அதை யார் எடுப்பது என்பது இன்னொரு விடயம்.இதை எப்படி எடுப்பது என்பது அடுத்த விடயம். எடுத்தது எப்படி அமையும் என்பது இதற்கடுத்த விடயம்.ஒன்று தெரியுமா உனக்கு,எண்பத்து மூன்று, எண்பத்து நாலு காலப் பகுதியில் முதலாவது விடயம் மட்டும் இருந்தது.எண்பத்தி நாலின் பின்பகுதியிலும்,எண்பத்தி ஐந்திலும் அதை எப்படி எடுப்பது என்ற பிரச்சினை மேலோங்கியது.எண்பத்தி ஆறிலோ யார் எடுப்பது என்ற பிரச்சினை வந்தது.இப்போதுதான் இது எப்படி அமையும் என்று பேசப்படுகிறது.எண்பத்தி மூன்றில் அமையும் தமிழீழம் எப்படி இருக்கும் என்ற கேள்வியை யாரும் கேட்டதில்லை. கேட்டவர்கள் பரிகசிக்கப்பட்டார்கள்.அதை எப்படிப் பெறுவதென்பதும் ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை.அது பற்றிப் பேசியவர்களும் பரிகசிக்கப்பட்டார்கள்.எண்பத்தி நாலிலோ எப்படிப் பெறுவதென்பது பெரிய பிரச்சினையாகியது.இதிலிருந்து ஒன்று புரியவில்லையா?தேவை மனிதரைச் செயற்படவைக்கிறது.செயல் மனிதருக்கு அனுபவத்தைத் தருகிறது.அனுபவம் திட்டமிட வைக்கிறது.எண்பதுகளில் எழுந்த உணர்வலை அடங்கி தொண்ணூறுகளில் அது நிதானமான திட்டமிடலின் அவசியத்தைக் கோரி நிற்கிறது. இந்தப் பத்தாண்டுகளின் அனுபவம் அது.ஆனால் இப் பத்தாண்டுகாலம் பலருக்குத் தொடங்கிய இடத்தை மறக்க வைத்துவிட்டது.தொடங்கிய இடம் ஞாபகமில்லாவிட்டால் போகும் இடம் பற்றித் தெளிவாக இருக்க முடியாது.போகும் இடம் தெளிவில்லையென்றால் <<போக்குக்கு>> அர்த்தம் இருக்க முடியாது!.ஆக,இப்

www.tamilarangam.net

போது தேவை எப்படி எமது போராட்டத்தை முன்னெடுப்பது என்பதைத் திட்டமிடுவதுதான்"நண்பர் மூச்சு விடாமல் சொல்லி முடித்தார்.எனக்கு இன்னமும் சந்தேகம் இருந்தது.

"சரி.திட்டமிடுவது யார்?பொருளாதாரத் திட்டமிடல்,கொள்கைத் திட்டமிடல் அதிகாரிகள் மாதிரி இதற்கும் யாராவது நியமிக்கப்பட வேண்டுமா?"என்று கேட்டேன் கிண்டலாக.

"மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்.மாற்றாரை உற வென்று நம்பவேண்டாம் என்று உலக நீதி சொல்கிறது ஞாபகம் இருக்கிறதா உனக்கு?மனம் போன படி போகிற <<தன்னியல்பு>>மனித வாழ்க்கையில் எல்லா நடைமுறையிலும் தோல்வியையே கொண்டுவரும்.சிலர் அதைப் புரிந்துகொண்டு விழித்துக்கொள்கிறார்கள். சிலர் அதைக் கண்டுகொள்ளாமலே காலத்தை வீணாக்கி அழிகிறார்கள். எமது போராட்டம் தன்னியல்பு வழி இழுத்துச் செல்லப்பட்டு முட்டு சந்திக்கு வந்து நிற்கிறது.சிலர் இந்தியாவுடனும்,சிலர் இலங்கையுடனும்,வேறு சிலர் ஆயுதங்களுடனும் கூட்டுச் சேர்ந்து தம்மைப் பாதுகாக்க முயல்கின்றனர்.தாமே உருவாக்கிய புயலிலிருந்து மீள ஒவ்வொரு பற்றுக்கோட்டைப் பிடித்துக்கொண்டு அதுபோகும் போக்கில் இழுபட்டுப் போகின்றனர். தமது மீட்சியின் அவசியம் பயணத்தின் நோக்கத்தையே அவர்களுக்கு மறக்க வைத்துவிடுகிறது.இப்போது நடப்பது ஒரு இருப்புக்கான போராட்டம் ஆகிவிட்டது(Struggle for Existance).ஆனால் இந்த தன்னியல்பு இருத்தலுக்கு வழிகாட்டுவதுடன் நின்றுவிடுகிறது என்று சொல்லலாம்.நவீன விஞ்ஞானம் ஒழுங்கான திட்டமிடலை முதன்மைப்படுத்துவது வெற்றிகரமான முடிவுகளைப் பெற.நாம் அப்படிச் செய்யாமல் தூங்கிக் கொண்டிருந்தோமாயின் திரும்பவும்,திரும்பவும் இதே இடத்திலேயே நிற்போம்.திட்டமிட்ட குடியேற்றக் கொள்கை அம்பதுகளிலேயே சிங்களப் பேரினவாதிகளால் திட்டமிடப்பட்டது.அப்போது ஒருவரும் அலட்டிக்கொள்ளவில்லை. ஆனால் அது இன்று பெரிய பிரச்சினையாக வளர்ந்திருக்கிறது.எதிரிகள் திட்டமிட்டுச் செயற்படும் போது நாம் மனம் போனபடி தன்னியல்பாக செயற்படுவோமானால் அது அவர்களது திட்டத்திற்கு சில தடங்கல்களை ஏற்படுத்த மட்டுமே முடியும்.அவர்களது நோக்கத்தை நாம் புரிந்துகொள்ளாவிட்டால் அடிக்கடி தடுமாறுவோம்.பௌத்த சிங்களப் பேரினவாதத்தில் வெடிப்பு ஏற்படுகிறதென்றோ, பிரேமதாஸ ஞானஸ்னானம் பெற்று சத்தியவான் ஆகிவிட்டான் என்றோ பிரமை கொள்ளுவோம்.ஆனால்இவை ஒவ்வொருதடவையும் எம்மை ஏமாற்

www.tamilarangam.net

றிக்கொண்டே போகும்...."அவர் மேலும் தொடர்ந்தார்.

"இன்னும் சொல்லலாம்.குறிப்பாக சனனாயகவாதிகளாகிய,இன்றைய போராட்டத்தின் தவறுகள் காரணமாக அதனுடன் ஒத்துப்போக மறுக்கிற,கடந்தகாலப் போராளிகளும், ஆதரவாளர்களும் தாம் பல தடவை தடக்கி விழுந்த பின்னும் எழுந்து நெஞ்சு மண்ணைத் தட்டிவிட்டு ஓடுகிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை இருந்த இடத்திலிருந்து ஒரு அங்குல மேனும் அப்பால் நகர்வது ஒரு வகை முன்னேற்றமே.இருப்புடன் முரண்பட்டு அதிலிருந்து மீற முயல்வதாகிய <<புரட்சியே>> இவர்களுக்கு மகத்தானதாகிவிடுகிறது. ஆனால் அந்த ஓரங்குலமும் எத்திசை நோக்கிப் போகிறதென்பது அவர்களுக்கு முக்கியமில்லை.தாம் வந்த பாதையை ஒருபோதும் திரும்பிப் பார்க்காததால் நகர்வு பின்னோக்கியா முன்னோக்கியா என்பது அவர்களுக்கு முக்கியமில்லை. ஜீன் போல் சாத்ரேயின் குட்டிக் கதை ஒன்றில் வரும் குதிரைக்காரனைப் போல லயத்தைவிட்டு வெளிப்படுவது மட்டுந்தான் சிந்தனை.எங்கே என்பது முக்கியமில்லை.ஆக, முதலில் - திட்டமிடலுக்கு முதலில் - நாம் செய்யவேண்டியதெல்லாம் திட்டமிடலின் அவசியத்தைப் புரியவைப்பதென்றே நான் நினைக்கிறேன்."

"ஆனால் திட்டமிடாமல்தான் இவர்கள் செயற்பட்டார்கள் என்று நீ அடித்துச் சொல்கிறாயா?அன்றைய கொமினிஸ் பாட்டி முதல் இன்றைய புலி வரை ஒருத்தரும் ஒரு திட்டமும் இல்லாமல் செயற்பட்டதாக நான் நினைக்கவில்லை. அவர்களிடம் ஒரு திட்டம் இருந்

## நகைச்சுவை!



*மக்கள் மயமாக்கலை தனியார்மய நடவடிக்கை என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வர்ணித்தனர்.உண்மை அதுவல்ல மக்கள் மயமாக்கல் நடவடிக்கைகளின்போது தொழிலாளர்கள் இலவசமாகப் பங்குகளைப் பெறுகின்றனர்.*

*(பாராளுமன்றத்தில் வர்த்தக, வாணிப அமைச்சர்)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தது.இல்லையா?"

"நீ சொல்வது முழுக்க முழுக்கச் சரியல்ல என்பது உனக்கே தெரியும்தானே.பிறகேன் கேக்கிறாய்..?"

"நீ என்ன சொல்கிறாய்.. எனக்கு விளங்கேலை" என்றேன் நான்.கொஞ்சம் எரிச்சல் வருமாப் போல் இருந்தது.

"கொம்மினிஸ்ட் பாட்டியிட்டை திட்டம் இருந்தது புத்தக வடிவில். அதுவும் ஒருவகை தன்னியல்பான திட்டம்.பழக்க தோஷத்தில் எழுதியது.அது ஒருபோதும் நடைமுறைப் படுத்தப்படுவதற்காக எழுதப்பட்டதல்ல.திட்டம் என்பது வெறும் காகிதத்தில் எழுதி வைப்பதல்ல.அது ஒருவரின் புரிதல்,செயல் இரண்டுக்கும் வழிகாட்டுவது.கொம்யூனிஸ்ட் கட்சி திட்டத்தை எழுதி வைச்சிட்டு மனம்போனபடி நடந்தது.திட்டம் படிக்க மட்டுமே தேவைப்பட்டது. செயற்பட அவர்களது தன்னியல்புப் போக்கே வழிகாட்டியது.புலிகளின் சோசலிஸத் தமிழீழத்தை நோக்கி என்ற புத்தகத்தைப் படிச்சிருந்தால் திட்டம் எழுதுவதன் நோக்கம் புரியும்.அவர்களின் ஸ்தாபனத்தின் சிந்தனையாக அது இருக்கவில்லை. மறுதலையாகச் சொன்னால் எழுதப்படுகிற திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு சிந்தனை வளர்க்கப்படவில்லை.ஸ்தாபனம் கட்டப்படவில்லை.மாறாக அது ஒரு தேவையற்ற தொங்குசதையாக இருந்தது. தவிரவும் திட்டமும்,திட்டத்துடன் எழுதப்பட்டதா?தன்னியல்பு சிந்தனைப் போக்குடன் எழுதப்பட்டதா? என்பது இன்னொரு பிரச்சினை..."

"நீ சொல்வது சிந்தனைத்துறையில் ஆதிக்கம் செய்கிற தன்னியல்பு உடைக்கப்படும்வரை, திட்டமிட்ட செயற்பாடு சாத்தியமில்லை என்பதுதானே?"

"அதுதான்.ஆனால் அச் சிந்தனையும் நீண்டகாலப் போராட்டத்திலேயே உடைக்கப்பட முடியும். எமது தோல்விக்கு என்ன காரணம் என்பது பற்றி யாருடனாவது பேசியிருக்கிறாயோ?"

"பேசியிருக்கிறேன்.பலர் எழுதினதைப் படித்திருக்கிறேன்.ஏன்...?"

"அவர்கள் பொதுவாக என்ன சொல்கிறார்கள்?"

நான் மௌனமாகினேன்.இந்தக் கேள்வி என்னுள் பல சிக்கல்களை எழுப்பிவிட்டது.தோல்விக்கு காரணம்?பிரபாகரனா?உமாமகேஸ்வரனா?இந்தியாவா?சுத்த இராணுவவாதமா?மக்கள் மீது நம்பிக்கையின்மையா? ஸ்தாபனங்களின் ஒழுங்கற்ற தன்மையா?தவறான அரசியல் நிலைப்பாடா?எது?எது?? எனக்குத் தீர்மானிக்க முடியவி

www.tamilarangam.net

ல்லை.நண்பரை நோக்கிப் பதில் தேடும் அவாவுடன் பார்த்தேன்.

"சரி, உதுக்குப் பதில் தொகுக்க கஷ்டம் என்றால் இதுக்குப் பதில் சொல்லு.புலிக்கும்,புளொட்டுக்கும் என்ன வித்தியாசம்..."

"இரண்டுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை.இரண்டும் ஒன்று தான்"என்றேன் நான் எரிச்சலுடன்.

"உது ஒருவகை ஆய்வு.ஆனால் உது முழுக்க முழுக்கப் பிழையுமில்லை.முழுக்க முழுக்கச் சரியும் இல்லை.உதாரணமாக <<இராணுவக்குழு>> வடிவத்தை நிராகரித்து சுத்த இராணுவப் பாதையை எதிர்த்து <<மக்கள் போராட்டம்>> என்ற கருத்துடன் பிரிந்த முதலாவது புலி உடையில் தோன்றியது தானே புளொட்.அப்ப எப்படி நீ வித்தியாசம் இல்லை என்று சொல்லுவாய்?புலி ஊர் ஊராய் ராணுவ முகாம் போடும்போது புளொட் பாசறை போட்டதும்,றோட் திருத்தினதும் மக்கள் யுத்தம் பற்றிப் பிரச்சாரம் செய்ததும் உனக்கு ஞாபகமில்லையா?"

"ஞாபகம்தான்.ஆனால் அவங்களும் தங்கடைப் பிரச்சாரத்தின் போது வவுனியா முதல் மாதகல் வரை ஒரு எல்.எம்.ஜி.யைக் காட்டியே தம்மைப் பற்றிப் பிரச்சாரம் செய்தவங்கள்.ஆக்களைச் சேர்த்தவங்கள்.உமைகுமாரன், இறைகுமாரனை சுட்டுத் தள்ளினவங்கள்"

"பொறு பொறு.அவசரப்படாதை. அப்ப ஏன் அவங்கள் பிளவுபட்டவங்கள்?"

"உமாவின்ரையும்,பிரபாவின்ரையும் தனிப்பட்ட பிரச்சினையாலை இல்லையோ?"

"அரசியல் எண்டு வந்தாப் பிறகு என்ன தனிப்பட்ட பிரச்சினை?அதுக்கும் ஒரு அரசியற் பின்னணி,சிந்தனைப் போக்குப் பின்னணி இல்லாமல் இல்லை.அதைவிடப் பெரிய உண்மை உடைவின் போது உமா இயக்கத்தில் இல்லை என்பது!"

"என்னவோ சரி.அப்ப நீ என்ன சொல்ல வாறாய் இப்ப?"என்றேன் நான் சலிப்புடன்.

"இப்போது ஒவ்வொருவரும் பிரச்சினையைப் பல்வேறு மட்டங்களில் ஆராய்கிறார்கள். தனிநபர் மட்டம்,ஸ்தாபன மட்டம்,அரசியல் மட்டம் என்று.ஆனால் பிரச்சினை இன்னமும் தத்துவார்த்த மட்டத்தில் சரியாக ஆராயப்படவில்லை. சிந்தனையை தன்னியல்புத் தத்துவம் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கிறது. அதனால் ஆய்விலும் அது தொழிற்படுகிறது.இந்த தன்னியல்பு நெறியின் இரு அந்தம்

www.tamilarangam.net

ஆன்மீக வாதம்,நம்பிக்கை வரட்சி, சோர்வு ஆகவும்,மறு அந்தம் அதி தீவிர பயங்கரவாதம் ஆகவும் இரு க்கிறது. கண்மூடித்தனமான செயல் என்பது இதுதான்..எங்களுடைய உரையாடல் தொடர்பாக வரும் விமர்சன ஆய்வுகளும் இப்படித் தான் உள்ளன.பொருண்மையான ஆய்வு என்று பெயரளவில் சொல் லிக்கொண்டே தன்னியல்பான ஆய் வுகள் நடக்கின்றன.உண்மையில் தன்னியல்பான ஆய்வுமுறை ஒரு ஆய்வுமுறையே இல்லை. அது வெறும் மனப்பிராந்திதான். புலி பற்றியோ அரசு பற்றியோ இந் தியா பற்றியோ எல்லா ஆய்வும் எமது விருப்பில் இருந்துதான் ஆர ம்பமாகின்றன. <<அழிவு அரசி யல்>>பற்றிப் பேசுபவர்கள் கூட ஆரம்பிக்குமிடம் சொந்த விருப்பி லிருந்துதான்..."

"சரி எப்படியோ சுற்றி உலகத் திற்கு வந்துவிட்டாய்.ஆனால் புலி களின் கடந்தகால நடவடிக்கைகள், அதன் பாதிப்புகள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு ஆய்வு செய்வதை எப்படி நீ தமது சுய விருப்பிலான ஆய்வுமுறை என்று சொல்லலாம்?அவை பொருண்மை யான உண்மைகளை(Facts)அடிப் படையாகக்கொண்டு அமைவதாகச் சொல்லமுடியாதா?"

"தகவல்கள், சம்பவங்கள் எல் லாம் பகுதிதான் உண்மை.அல்லது அவை உண்மையின் ஒரு பகுதி களே.ஒரு பொருளின் தொடக்கமும் முடிவும் பற்றிய அதன் போக்குப் பற்றிய அறிவில்லாமல் ஒரு பொரு ளை <<இதுதான்>> என்று அடித் துச் சொல்லுவது பகுதி உண்மை மட்டுமே.அதன் மாறுதல் கட்டம் எதுவென்று ஆராயாமல் சொல்லப் படுவது சில நிலைமைகளை விளக் கும்;ஆனால் அது எப்போதும் சரி யாக இருக்கவேணும் என்றில்லை"

"இன்று உனது பேச்சே ஒரு புதிராக இருக்கிறது என்றால் உனது பேச்சின் கனவிடயங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை.ஒரே குழப்பமாக இருக்கிறது...."

"இதிலே குழம்ப எதுவும் இல்லை.நிதானமாக யோசித்தால் சரி.கே.கே.எஸ். ரோட்டில் யாழ்ப் பாணப் பக்கமாகப் போய்க்கொண் டிருக்கும் ஒருவன் யாழ்ப்பாணம் தான் போகிறான் என்று அடித்துச் சொல்வது முழு உண்மையல்ல என் பது போன்ற ஒன்றேதான் நான் சொன்னது..."

"அதில் என்ன பிழை?அது எப்படி பகுதி உண்மையென்பாய்?"

"முதலில் அவன் எவ்விடத்தில் போகிறான் என்பதைப் பார்க்க வேண்டும்.உதாரணமாக அவன் தெல்லிப்பளையில் போகிறான் என்றால் மல்லாகம்,சுன்னாகம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மருதனாமடம் , கோண்டாவில், தாவடி ஆகிய சந்திகளில் அல்லது அதற்குள் வரும் ஏதாவது ஒரு ஒழுங்கையில் அவன் திரும்பலாம். இப்போ உனது கணிப்பு பகுதி உண்மையாகிவிடகிறதல்லவா?"

"இதற்கும் புலி பற்றிய மதிப் பீட்டுக்கும் என்ன சம்பந்தம்?"

"புலி இந்தியாவுடன் பேசினது, றெயினிங் எடுத்தது,இலங்கையுடன் பேசியது,பிறகு சண்டை பிடிப்பது, இன்று பேசத் தயாராக உள்ளது எல்லாம் வெவ்வேறு சம்பவங்கள். புலியின் உள்ளார்ந்த இயல்பைப் புரிந்துகொண்டால் மட்டுந்தான் இந் நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள் ளலாம்.இல்லாவிட்டால் இவை பற்றி எதுவும் சொல்லமுடியாது. நிகழ்சிகளை வைத்து நோக்குபவர் புலியைத் துரோகி என்றும்,தேசிய போராளி என்றும்,பாஸிஸ்ட் என் றும் பல்வேறு விதமாக அபிப்பிரா யம் சொல்வார்.ஆனால் ஆய்வு செய்ய அவரால் முடியாது.அவர் களது அரசியல் <<அழிவுத் தன்மை யானது>> என்று சொல்வது அதன் உள்ளார்ந்த தன்மையைப் பிரதிபலி க்காததால் - அத்தகையதொரு அம்சத்தையும் அது கொண்டிருந் தபோதும் - அதன் போக்கை விள க்க முடியாதுள்ளது.இங்கு சம்பவ ங்கள் தொகுக்கப்படுகின்றன. தொகுக்கப்படும் சம்பவங்கள் புலி களின் பல்வேறு நடவடிக்கைகளின் அழிவுத்தன்மைகளைக் காட்டுகின் றன.ஆனால் அதுவே அது மட் டுமே அவற்றின் முழுமையல்ல. எமது பிரச்சினை புலியில் மட்டும ல்ல அனைத்து இயக்கங்களிலும் நிலவிய பொதுப்போக்கான - இன் றளவும் நிலவுகிற - தன்னியல்புப் போக்கை சிந்தனைத்துறையில் ஒழிப்பது;ஆய்வுமுறையில் அதன் ஆதிக்கத்தை தத்துவார்த்தரீதியில் உடைப்பது.அதன் மூலம் புதிய திட் டமிடம் சக்தியை எமக்கு உருவாக் கிக்கொள்வது என்பதே.சரியான திட்டமிடல் இருப்பின் செயல் உரு வாக்கம் பெறவும்,வெல்லவும் அதிக கஷ்டமிருக்காது."

"ஆனால் இந்தத் திட்டமிடலு க்கு எவ்வளவு காலம் எடுக்கும்?"

"அது எமது முயற்சியில்,திற ந்த விவாதத்தில் தங்கியுள்ளது. விவாதம் முக்கியம் என உணரப் பண்ணவே எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது.பார்ப்போம்..."

"ஆக நீ சொல்கிறபடி திட்டமி டல் முடியம்வரை நாம் எதுவும் செய்ய முடியாது,முன்னேற முடி யாது என்பதுதானே?"

"திட்டமிடலே ஒரு முன்னேற் றம்தான்.தவிரவும் ஒருவகைப் போராட்ட படிமுறை வளர்ச்சியில் தான் சாத்தியம்.தன்னியல்புச் சிந் தனையை உடைத்துப் பொருண்மை

www.tamilarangam.net

யான ஆய்வுகளுடன் நாம் செயற்படுவது என்றால் அது ஓரேநாளில் சாத்தியமென்றோ நாம் தொடங்கிய அதே கணத்திலேயே தன்னியல்புச் சிந்தனை எம்மிடமிருந்து விடைபெற்றுப் போய்விடுமென்றோ அர்த்தமில்லை.புதிய சிந்தனைக்கு எம்மை நாம் பயிற்றுவிக்க வேண்டும்.அதற்கு நிறையக் கற்கவேண்டும்.கற்றதைக்கொண்ட நடைமுறை வேலையில் ஈடுபடவேண்டும்.பிறகு திரும்பவும் அதைக் கற்று...."

"ஓஹோ"என்று சிரித்தேன் நான்.

"ஏன் சிரிக்கிறாய்..?"

"இல்லை.. உன்ரை நடைமுறை வேலைக்குப் புலி விடவா போகுது? அதென்ன அப்பிடி நடைமுறை?"

"விவாதிப்பது,பழைய அனுபவங்களைப் புதிய சிந்தனை ஒழுங்கில் தொகுப்பது,ஒரு தேசவிடுதலைப் போராட்டதிற்கான அடிப்படைகளை உருவாக்குவது..."

"புலி விடுமா?"

"எது செய்ய வேணுமென்று யோசி.ஆர் விடுவினம் என்று யோசியாதை .அதை எப்படித் தவிர்ப்பது அல்லது அதையும் மீறி எப்படி இயங்குவது என்று யோசி. அது அல்லவா முக்கியம்..."

எனக்குப் பேச முடியவில்லை. பல குழப்பங்களும் ,சந்தேகங்களும் கிளம்பின.வாசகர்களுடன் எமது உரையாடலைப் பகிர்ந்துகொண்டு விட்டுத் திரும்பவும் பேசுவோம் என்று யோசித்தேன்.நான் முன்பும் இதுபற்றிச் சொல்லியும் யாரும் அக்கறை காட்டவில்லை.இம்முறை யாவது யாராவது இதுபற்றிச் சொன்னால்,கருத்து முன்வைத்தால் பகிர்ந்து கொண்டு விவாதிக்க முடியும் என்று நினைக்கிறேன்!

## நகைச்சுவை!



*தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முக்கிய தலைவரான உமா மகேஸ்வரனின் இழப்பு புளொட்டுக்கு மட்டுமல்ல ,தமிழ் பேசும் இனத்திற்கே பேரிழப்பாகும். அவர் ஆற்றிவிட்டுச் சென்ற பணிகளை நாம் நினைவுகூருவோம். (லண்டனில் நடந்த நினைவாஞ்சலிக் கூட்டத்தில் ENDLFஉறுப்பினர்)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொலைகார உலகம்!

அரசியல் காரணங்களுக்காக உலகின் பல பாகங்களிலுமுள்ள 141 நாடுகளில் மக்கள் சித்திர வதைக்குள்ளாகியும் ,கொடுமைக்கு உள்ளாகியும், கடத்தப்பட்டும் , காணாமற் போயும்,விசாரணைக ளின்றி கொடிய சிறைகளில் அடைக் கப்பட்டும்,கொல்லப்பட்டுமுள்ளார் கள்.

கடந்த மாதங்களில் குவைத்தில் ஈராக் படைகளினால் மேற் கொள்ளப்பட்ட அக்கிரமங்கள் குறித்தே உலகின் கவனம் 'திருப்பப் பட்டிருந்ததால்' ஏனைய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் அதிக கவனத்தைப் பெற முடியாமல் மறைக்கப்பட்டுவிட்டன. பல நாடுகளில் இம் மனித உரிமை மீறல்கள் இன்னும் தொடர்ந்து கொண்டிருப்பதுடன் நிலைமைகள் மேலும் மேலும் மோசமாகிக் கொண்டிருக்கின்றன.

40க்கு மேற்பட்ட நாடுகளில் சித்திரவதைகளின்போது மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் .அரசாங் கப் படைகளினால் பொதுமக்கள் மேல் ஒழுங்குபடுத்தப்பட்ட சித்திர வதைகள் பிரயோகிக்கப்படுகின் றன.கைது செய்யப்படுபவர்கள் பொலிலாரினால் குறுந்தடிகள்,துப் பாக்கிக் கைப்பிடிகளினால் அடித்து நொருக்கப்படுவதிலிருந்து அழுக் கான சாக்குகளால் முற்றாக முடிக் கட்டப்பட்டு ஆண்களின் பிறப்புறுப்பு விதைகள் நசுக்கப்படுவது உட்பட பலவகையான கொடுஞ் சித்திர வதைகள் அரசபடைகளால் மேற் கொள்ளப்படுகின்றன.

29க்கு மேற்பட்ட நாடுகளில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் காணாமற் போவது தொடர்ந்து கொண்டிருக்கிறது.இதன் விளக்கம் காணாமற் போனவர்களாகக் கரு

www.tamilarangam.net

தப்படுபவர்கள் அரசாங்கங்களின் இரகசியப்படைகளினால் கொல்லப் பட்டுள்ளார்கள் என்பதே.

பல நாடுகளில் அரசாங்கங்களின் "மரணப் படைகள்" முதலாளிகளுக்கெதிரான தொழிலாளர்களின் போராட்டங்களில் தலையிட்டு தொழிலாளர்களைக் கொலை செய்து முதலாளிகளுக்குச் சேவகம் செய்து வருகின்றன.

மிகவும் அதிர்ச்சியளிக்கும் செய்தி சிறுவர்கள்,குழந்தைகளும் கொலைப்பட்டியல்களில் இடம்பெறுவது.பிறேஸிலின் தலைநகரத்தில் சென்ற வருடத்தில் மட்டும் 500க்கு மேற்பட்ட சிறுவர்களும்,குழந்தைகளும் அரசாங்கத்தின் மரணபடைகளால் கொல்லப்பட்டுள்ளனர்.

90 நாடுகளில் மரணதண்டனை இன்றும் அதிகாரபூர்வமாய் அமுலில் உள்ளது.தமதுஆட்சிமுறைக்கு எதிரான பொதுமக்களை இந்த நாடுகளின் அரசாங்கங்கள் தூக்கிலிட்டுகொன்றுவருகின்றன .அமெரிக்காவில் மட்டும் 2,300 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

*- சர்வதேச மன்னிப்புச் சபையின் 1991ஆம் ஆண்டு அறிக்கையிலிருந்து தொகுப்பு: நிக்ஸன்*


# தூண்டில்

செப்டெம்பர் 1991

இலம்: 45

ஆசிரியர் குழு: கடலோடிகள்



முகவரி: THOONDIL
Südasien Büro
Grosse Heimstr. 58
4600 Dortmund 1
Germany

தொலைபேசி: (0231) 136633
<புதன்கிழமைகளில்
14-20 மணிவரை>


சந்தா

| | | | |
|---|---|---|---|
| ஜேர்மனி | 6 மாதங்கள் | = | 20,- D.M |
| | 1 வருடம் | = | 38,- D.M |
| ஐரோப்பா | 6 மாதங்கள் | = | 25,- D.M |
| | 1 வருடம் | = | 48,- D.M |
| அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா | 1 வருடம் | = | 65,- D.M |
| அவுஸ்ரேலியா | 1 வருடம் | = | 75,- D.M |

தபாற்கணக்கு இல: 308 074 68
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

சந்திகை வளர்ச்சிக்கான உதவியில் ஒன்றாக உங்கள் சந்தா நிதியை அனுப்பிவைத்ததும் எமக்கு கடிதம் மூலம் அறிவியுங்கள்.

உங்கள் கருத்துகள்,விமர்சனங்களுடன் எங்களுடையதும்,உங்களுடையதுமான முயற்சிகளைப் பயனுள்ளதாக்குவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவித்தல்

அரசு புலிகளை முடக்கலாம். அழிக்க முடியாது. அது தமிழ் மக்களின் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டது.

புலிகளும் அரசைத் தாக்கலாம். வெல்ல முடியாது. ஏனென்றால் அது மக்களின் பங்களிப்போடு சம்பந்தப்பட்டது. இவர்களின் அடிப்படைத் தவறே "மக்கள்" என்று ஒரு முக்கியமான பகுதி எமது போராட்டத்தில் இருப்பதையே ஏற்றுக்கொள்ளாததாகும். தம்மையும். தமது ஆயுதங்களையும் விட்டால் ஒரு உலகம் இருப்பதாக இவர்கள் நம்புவதே இல்லை.